# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**ஜனவரி 2006 ஜீவியம் 11 மலர் 9**

## இம்மாத மலரில்..........

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| இம்மாதச் செய்தி | 2 |
| லைப் டிவைன் - கருத்து | 3 |
| அன்பர் கடிதம் | 6 |
| சாவித்ரி | 9 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 11 |
| 4 + 8 = 3,00,000 | 15 |
| எங்கள் குடும்பம் II | 29 |
| அஜெண்டா | 50 |
| லைப் டிவைன் | 52 |
| *Problem Solving By The Spirit* | 64 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.
வருடச் சந்தா ரூ.60/-

## ஜீவியத்தின் ஓசை

✡ **உயிரை மதிப்பது நம்மை உத்தமனாக்கும்.**

✡ **இலட்சியத்திற்கு ஜீவன் உண்டு; ஸ்தாபனம் உயிரை எடுக்கும்.**

✡ **உயர்ந்தது தருபவை அனைத்தும் உயர்ந்தவை.**

✡ **உளநலத்தால் உயிர் வாழ்பவன் உடல்நலத்தைப் பேணுவான்.**

✡ **எதில் பிறந்தாலும் அதன் முத்திரையிருக்கும்.**

**Decision is not for man.
It is His.**

## இம்மாதச் செய்தி

**யாருக்குச் சேவைசெய்தாலும் அது அன்னைக்குச் செய்த சேவை.**





**The ideal of the infinite Soul and a perfect oneness is unattainable.**

**அனந்தகுணம் உடைய ஆத்மா வாழ்வுடன் ஒன்றி இணைவது நடைபெறாது.**

- ✡ அஞ்ஞானம் ஏழுவகைப்பட்டது.
- ✡ இதுவரை The Life Divine ஜடமும், ஆத்மாவும் ஒன்றுஎனக் கூறியது.
- ✡ உலகம் அஞ்ஞானஇருளில் சிருஷ்டிக்கப்பட்டது.
- ✡ The Life Divine ஏழுவகை அஞ்ஞானத்தை விளக்கும்பொழுது, சிருஷ்டியின் ஏழு தத்துவங்களைக் கூறுகிறது.
- ✡ இருளில்லாத உலகம் சாத்தியமா, அஞ்ஞானமற்ற வாழ்வு நடக்குமா என்பது கேள்வி.
- ✡ வேதம் அது முடியும்எனக் கருதியது.
- ✡ தன்னையறியும் ஆத்மா, தன்னுடன் ஒன்றிய உலகத்தை சிருஷ்டிப்பதே இலட்சியம்.
- ✡ ஆனால் சிருஷ்டி அஞ்ஞானத்தால் ஏற்பட்டது.
- ✡ நம் பார்வைக்கு இருள் ஆரம்பம், இருளே முடிவு.
- ✡ வாழ்வின் இருண்ட பார்வைக்கு ஆத்மா அன்னியமாகத் தோன்றுகிறது.
- ✡ அதனால் ஆன்மீகவாழ்வு - இருளற்ற ஒளிமயமான வாழ்வு - முடியாதுஎன முன்னோர்கள் கருதினர்.
- ✡ நமக்கு வாழ்வு நடைமுறை. யதார்த்தம்என நாம் அதைக் கூறுகிறோம்.
  - ❀ நடைமுறைக்கு இலட்சியம் பயன்படாதுஎன நாம் நெடுநாளாக அறிவோம்.

❀ அரிச்சந்திரன் கதை பொய் சொல்லாதவன் பட்ட பாட்டைக் கூறுகிறது.

❀ கர்மத்திலிருந்து எவரும் தப்பமுடியாதுஎன நளமகாராஜன் கதை விளக்குகிறது.

❀ வெளியில் போய், உள்ளே வந்து கால்களை அலம்பும்பொழுது நீர் படாத இடமிருந்தால், அதன் வழி சனியன் உள்ளே வருவான்என நாம் வாழ்வை நடத்துகிறோம்.

❀ கீதை பெரிய தத்துவம்.

❀ பாரதம் கீதையின் விளக்கம். அது நடைமுறை.

❀ தர்மம் நியாயமாக ஜெயிக்கவில்லை. போரிட்டுப் பெறவேண்டியது ஆயிற்று.

❀ பாரதப் பிரசங்கத்திற்கு ஊரே திரண்டுவருகிறது. கீதைப் பிரசங்கத்திற்கு ஒருவர் வந்தார்.

❀ இலட்சியம் நடைமுறைக்கு உதவாதுஎன்பது உலக அனுபவம்.

✡ இந்த யதார்த்தமான உலகில் வேதமும் முடியாதுஎனக் கைவிட்ட இலட்சியத்தை - நியாயமான பூலோக சுவர்க்கத்தை - ஸ்ரீ அரவிந்தம் முடியும்எனக் கூறி நடத்திக்கொண்டிருக்கிறது. மனிதன் காதில் அக்குரல் விழவில்லை. எங்கெல்லாம் மனிதன் குறுக்கிடமுடியாதோ, அங்கெல்லாம் இந்த Force அவனுக்கு வரஇருக்கும் ஆபத்துகளை - சீனப் படையெடுப்புபோன்றவற்றை - அவனை அறியாமல் விலக்குகிறது.

✡ நாம் பிரார்த்தனையால் இந்த Forceஐ அழைத்தால், அழைத்த காரியத்தைச் செய்துகொடுக்கிறது.

✡ உலகம் ஏற்பட்ட இருண்ட அமைப்பில், எந்த இலட்சியவாதியும் வெல்லமுடியாது.

✡ ஸ்ரீ அரவிந்தம் அவ்விருளைமீறி, விலக்கி, நாம் நாடும் காரியத்தை முடிக்கிறது.



✡ நாம் அனுதினமும் பார்க்கிறோம். ஆனால், திரையே நிதர்சனமாக இருக்கிறது. திரையின் பின்னணியில் செயல்படும் Force நம் மனத்தைத் தொடுவதில்லை.

✡ தொடும்வரை Force பொறுமையாகக் காத்திருக்கிறது.

✡ ''ஞானமும், அஞ்ஞானமும்''என்ற Life Divine அத்தியாயத்தில் பகவான், ''ஏன் இது இதுவரை முடியவில்லை, இனி எப்படி முடியும்''என விளக்குகிறார்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஓர் இலட்சியத்தைப் புரிந்துகொள்ளுதல், அதன் சிறப்பை உணர்தல், அதன்மீது ஆசைப்படுதல், அதற்கென ஆர்வம் கொள்ளுதல், ஆகியவை நாம் உள்ள நிலையில்தான் (plane) முடியும். நமக்கு மேற்பட்ட அல்லது கீழ்ப்பட்ட நிலையில் உள்ளவற்றின்மீது அதுபோன்ற ஆர்வம் ஏற்படாது. உணர்ச்சி வசப்பட்ட காரியங்களை மனம் நம்புவதில்லை. அவற்றை அர்த்தமற்றதாக அறிவு கருதும். பகவான் சொல்லும் யோக முயற்சி, வளரும்ஆன்மாவுக்குரியது. நாம் மனத்திலிருந்து செயல்படுகிறோம். இடையில் 9 அல்லது 10 நிலைகள் இருப்பதால் யோகத்தை மனம் முழுஆர்வத்துடன் புரிந்துகொள்ளமுடிவதில்லை.

*இலட்சியச் சிறப்பை ஆர்வமாகப் பூர்த்திசெய்ய நம்மளவில்தான் முடியும்.*

## அன்பர் கடிதம்

**ஸ்ரீ அன்னையின் பாதவிந்தாரமே சரணம்! ஸ்ரீ அரவிந்த அன்னை சரணம்**. எங்கள் வாழ்வில் அனைத்துமே அன்னைதான். நாங்கள் வீட்டின் ஒரு பகுதி கட்டுவோம்என்ற எண்ணமே இல்லாமல் இருந்தோம். அன்னைதான் அதற்குரிய சூழலை உருவாக்கிக்கொடுத்தார். நாங்கள் கடன்வாங்கிதான் வீடு கட்டினோம். நாங்கள் ஒருவரிடமும் கடன் கேட்கவில்லை. அவர்களே வீடு ஏறி வந்து கடன் கொடுத்து, எங்களை வீடு கட்டச் சொன்னார்கள். வீடும் நன்றாக அமைந்தது.

என் மூத்தார் பெண். அவளுக்கு மூளையில் T.B. கட்டி இருந்து இருக்கிறது. ஆனால், வெளியில் தெரியவில்லை. கல்யாணம்ஆகி, கர்ப்பம் அடைந்ததும் அடிக்கடி வலிப்பு வர ஆரம்பித்தது. டாக்டரிடம் டெஸ்ட் பண்ணியதில், அவளுக்கு மூளைக்கட்டி இருப்பதாகக் கூறினார். அவர் குடும்பத்தார் அனைவரும் மிகவும் வருத்தத்துடன் இருந்தனர். நானும், அவளும், அவள் குடும்பத்தினரும் அடிக்கடி அன்னைக்கு பிரார்த்தனை செய்துகொண்டு இருந்தோம். டாக்டரிடம் காண்பித்து மருந்து, மாத்திரை சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். பிரசவ நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. ஆபரேஷன் செய்து குழந்தையை வெளியே எடுத்தனர். பிரசவத்தன்றும் வலிப்பு வந்துவிட்டது. தொடர்ந்து மருந்து, மாத்திரை சாப்பிட்டுக் கொண்டு இருந்தாள். அவள் பிறந்தநாளன்று, அதிகாலையில், ஒருவர் தலையின் மண்டைஓட்டில் ஓட்டைபோட்டுக்கொண்டு ஒரு புழு வெளி வருவதாகவும், நான் என் கையினால் அந்த புழுவை அகற்றுவது போலவும் கனவுகண்டேன். அன்று இரவே டாக்டரிடம் சென்று தலையில் ஸ்கேன் செய்ததில் டாக்டர், “மூளையில் உள்ள கட்டி வியக்கும் அளவுக்கு கரைந்துஇருக்கிறது”என்றார். எங்கள் அனைவருக்கும் மிக்கமகிழ்ச்சி. இந்த அற்புதத்தை நடத்தியது ஸ்ரீ அன்னைதான். ஸ்ரீ அன்னைக்கு ஆயிரம் கோடி நன்றிகள்!

*எங்கள் வாழ்வில் நடந்தது:* எங்களுக்கு இரு பிள்ளைகள். மூத்தபையன் உடம்பு பலவீனமானவன். 10ஆம் வகுப்புவரை தமிழ் மீடியத்தில்தான்



படித்தான். படிப்பும் சுமாராகப் படிப்பான். 10ஆம் வகுப்பு முடித்ததும் DME படித்தான். அப்போதுதான் அன்னையை நாங்கள் ஏற்றுக்கொண்டு இருந்த நேரம். அவன் DME பாஸ்பண்ணியதே அன்னையால்தான். அவன் B.E. படிப்பான் என்று நாங்கள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அன்னைதான் அவனை B.E.யில் பாஸ்செய்யவைத்தார். இப்போது வேலைக்கும் போகிறான். அவனை இந்த அளவு உயர்த்தியது அன்னைமட்டுமே.

என் நாத்தனார் அரக்கோணம் பக்கத்தில் செஞ்சி, பனப்பாக்கம் என்ற கிராமத்தில் வசித்துவருகிறார். என் நாத்தனாரும் அன்னை பக்தர். அவர் கிராமத்தில் அனைவருக்கும் அன்னையைப்பற்றிச் சொல்வார். அவர்களுடைய பக்கத்துவீட்டிலுள்ள ஒரு பால்காரப்பெண் அன்னையின் தீவிரபக்தை. தினமும் மாடுகளை மேயவிட்டுவிட்டு அன்னைக்காக அங்குள்ள பூக்களை பறித்துக்கொண்டுவருவாள். மாடுகள் தினமும் 1 லிட்டர் பால்தான் கறக்குமாம். அவர் அன்னையின் பக்தர்ஆன அன்றிலிருந்து மாடுகள் 2 லிட்டர் பால் கறக்கிறதாம். இதுவும் அன்னையின் அருள்தான்.

என் மூத்தார் பையன் செல்போன் வைத்திருந்தான். ஒரு நாள் அவன் வீட்டிலேயே யாரோ அதைத் திருடிக்கொண்டுபோய்விட்டனர். வீடு முழுவதும் தேடிஆயிற்று. 3 நாட்கள் கழித்து நானும், என் கணவரும் அவர்கள் வீட்டிற்குச் சென்றிருந்தோம். அப்போது செல்போன் காணாமல் போனதைப்பற்றிச் சொல்லி மிகவும் வருத்தப்பட்டான். அங்கிருந்து நாங்கள் மாம்பலம் தியானமையம் போவதாக இருந்தோம். அதனால் மூத்தார் பையனிடமிருந்து காணிக்கையாக ரூ.11/- பெற்றுக்கொண்டு தியான மையத்தில் அந்தக் காணிக்கையைச் சேர்த்துவிட்டு, எங்கள் வீட்டிற்குத் திரும்பினோம். 10 நாட்கள் ஆகிவிட்டது. இந்த விஷயம் மறந்தும் போய்விட்டது. 10 நாட்கள் சென்று, யார் எடுத்துச் சென்றார்களோ அவர்களே கொண்டுவந்து இவர்கள் வீட்டிலேயே வைத்துவிட்டுப் போய்விட்டார்கள். யார் எடுத்துச்சென்றார்கள், யார் கொண்டுவந்து வைத்தார்கள்என்று இன்றுவரை மர்மமாகவே

இருக்கிறது. அவர்களுக்கு மிக்கசந்தோஷம், செல்போன் திரும்பக் கிடைத்ததில். இந்த நிகழ்ச்சியை நடத்தியது ஸ்ரீ அன்னைதவிர யாரும் இல்லை. அன்னை அருளே காணாமல்போன பொருளைத் திரும்பக் கிடைக்கவைத்தது.

அன்னையின் பாதமே சரணம்! அன்னைக்கு அனேக கோடி நன்றிகள்!!

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

**பூரணயோகத்தின் சுருக்கம் ஆத்மசமர்ப்பணம். யோகம்என்ற கட்டிடத்தில் ஆத்மசமர்ப்பணம் ஒரு செங்கல்.**

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தீவிரமான ஆசை தீவிரத்தையும், ஆசையின் திறனையும் இழந்தபின் உயிரற்ற – ஜடமான – வாழ்வாகிறது. ஆனால், அது வாழ்வை முழுவதும் ஆக்கிரமித்துக்கொள்கிறது. நம் போக்கை நிர்ணயிக்கும் திறனுள்ளது. "உன் திருவுள்ளம் நிறைவேறட்டும்"என்ற மந்திரம், நம்மை அதன் பிடியிலிருந்து விடுவித்து, ஆனந்தத்தை உற்பத்திசெய்கிறது. அதனால், "உன் திருவுள்ளம் நிறைவேறட்டும்"என **Agenda 12, 13**இல், அன்னை ஜடத்தைத் திருவுருமாற்றம்செய்ய, (ஜடத்தின் ஜீவியமன்று) எடுத்த முயற்சிகளை விவரித்திருக்கிறார்.

***உயிரற்ற ஜடம் மாறுவது திருவுள்ளம்.***





## P.59 Abandoned to a task beyond our force.

**சக்திக்குமீறிய கடமையை ஏற்றவர் நிலை.**

- ✡ **விதிஎனும் சிக்கல்ஊடே செல்லுதல்வேண்டும்.**
- ✡ **மரணத்தின்மூலமும், தோல்வியின்மூலமும் கசந்த பயணம்.**
- ✡ **நம் வாழ்வை அரவணைக்கும் ஆதரவு.**
- ✡ **எண்ணிலடங்கா உடல்களும், பிறப்புகளும் அருகிலிருந்து தரும் ஆதரவு.**
- ✡ **உடும்புப்பிடியாக உதவும் உருவம்.**
- ✡ **தவிர்க்கமுடியாத சிகரமான பலன்.**
- ✡ **எந்த விதியும் மாற்றமுடியாத, எந்தக் கையும் அகற்றமுடியாத அன்பு.**
- ✡ **அமரத்துவம்எனும் தன்னையறியும் மகுடம்.**
- ✡ **உழலும் உயிர்கட்கு உறுதியளிக்கப்பட்ட தெய்வம்.**
- ✡ **மனிதன் மரணத்தை ஏற்று வாழ்வை நாடிய ஆரம்பம்.**
- ✡ **உலகைப் படைத்து ஆளும் ஆண்டவன்.**
- ✡ **நம் குறைகள் அவன் யாத்திரையின் அடிச்சுவடுகள்.**
- ✡ **நம் வாழ்வின் ஏற்றத்தாழ்வின் கடுமை அவன் செயல்படும் அரங்கம்.**
- ✡ **நம் வேதனையும் கண்ணீரும் பாவமும் அவன் வகுத்த பாதை.**
- ✡ **நம் இருளைக்கடக்கும் அவன் ஞானம்.**
- ✡ **நம் தோற்றம் எதுவானாலும்,<br>நம் தலைவிதியின் கடினநோய் கடிந்தாலும்,<br>நம்மைக் காணாமல் கரைபுரளும் கலக்கமானாலும்,<br>மகத்தான ஒளி நம்மை வழிநடத்திச் செல்கிறது.**
- ✡ **பரந்த நம் உலகம் நம் சேவையை ஏற்றபின்,<br>இறைவனின் ஆனந்தமும் ஒருமையும் நம் பிறப்புரிமை.**

- ✡ அறிவுக்கெட்டாதவனின் பஞ்சாங்கத்தில் கணிக்கப்பட்ட நாள்.
- ✡ பவித்திரம் பிறந்த ஆண்டு நிறைவு.
- ✡ கடுநடையின் காரணம் கர்த்தா அறிவான்.
- ✡ இல்லைஎன்பதும், எட்ட இருப்பதும் அருகே வரும்.
- ✡ சாந்தமான பெருவலிமை முடிவாகச் செயல்படும்.
- ✡ விதிக்கப்பட்ட பாதையை விருப்பமாக ஏற்பார்.
- ✡ ஞானப்பெட்டகமான கருணை ஜோதி.
- ✡ ஜனிக்கும் குரலுக்காக காத்திருக்கும் ஆத்மா.
- ✡ அறியாமையின் பாதாளத்தை இணைக்கும் பாலம்.
- ✡ வாழ்வின் பிளவுகள் பிணைக்கப்படவேண்டும்.
- ✡ பிரபஞ்சம்என்ற மடுவை நிரப்பவேண்டும்.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

**ஆன்மா செயல்பட மனம் மௌனமாக இருக்கவேண்டும்என்பது தெளிவு.**

### ஸ்ரீ அரவிந்த சுடர்

நல்லது, கெட்டதைத் தாண்டிவந்தால் சைத்தியஉலகை அடைகிறான். இது மனிதனுக்குச் சிரமமான காரியம். சமூகத்தின் கடந்தகாலக் கொடுமையை இன்று விலக்கி நல்லதைப் பின்பற்றுகிறான். அதனால் நல்லது எது, கெட்டது எதுஎன்ற பாகுபாடு போய்விடுகிறது. சமூகம் ஏற்பதையே நல்லதென நினைக்கமுடிகிறது.

***உலகத்திற்கு நல்லதைத் தனக்கு நல்லதாக மனிதன் கொள்கிறான்.***



## யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**865) உள்ளெழுந்துவரும் ஆர்வத்தாலோ, புறச்சந்தர்ப்பத்தின் நிர்ப்பந்தத்தாலோ மனிதன் கடவுளை நாடுகிறான். ஏதோ ஒரு சமயம் தெய்வம் மனிதனை நேராகவோ, மறைமுகமாகவோ தன்னை நாடும்படி வற்புறுத்துகிறது.**

***ஆர்வத்தால் ஆண்டவனை நாடும் மனிதனை ஆண்டவனும் தன்னை நாடும்படி வற்புறுத்துகிறான்.***

- ✡ சிருஷ்டிஎன நாம் கூறுவது ஆண்டவன் ஒளிவது.
- ✡ பரிணாமம்என்பது ஆண்டவன் ஒளிவதிலிருந்து எழுவது.
- ✡ ஆன்மாவின் 12 அம்சங்களிலும் இதை நாம் காணலாம்.
- ✡ அனந்தம், காலத்தைக்கடந்தது, ஐக்கியம், சத்தியம், நல்லது, ஞானம், திறமை, அழகு, அன்பு, ஆனந்தம், மௌனம், சக்தி, ஆகியவை அந்த 12 அம்சங்கள்.
- ✡ ஒளிவதும், கண்டுபிடிப்பதுமில்லாத வாழ்வின் அம்சமேயில்லை.
- ✡ அகம், புறம், ஆகியவை சிருஷ்டியின் பகுதிகள்.
- ✡ புறத்தைத் தன்னுட்கொண்ட அகமும் உண்டு.
- ✡ புறச்சந்தர்ப்பம் மனிதனை ஆண்டவனை நோக்கிச் செலுத்துவது நிர்ப்பந்தம்.
- ✡ அகம் ஆண்டவனை நாடுவது பக்தி.
- ✡ ஆண்டவனே மனிதனை நாடுவது அருள்.
- ✡ ஒரு பாக்டரியில் ஸ்டிரைக் செய்து சம்பள உயர்வு கேட்கிறார்கள், பெறுகிறார்கள்.

✡ அதிக இலாபம் வருவதால் நிர்வாகம் போனஸ் தருகிறது.

✡ சட்டம் ஏற்பட்டு சம்பளம் உயர்கிறது.

✡ மார்க்கட் வளர்வதால், ஆள் கிடைக்காமல் சம்பளத்தை உயர்த்து-கிறார்கள்.

✡ அத்தனையும் உயரும் வழிகள்.

✡ நிலவரம் எதிரானால் இத்தனை முறைகளால் சம்பளம் குறையும்.

✡ கல்வி, மருத்துவம், நிர்வாகம், தொழில், விளையாட்டு, போர் ஆகிய அத்தனைத் துறைகளிலும் இத்தனை முறைகள் உண்டு.

✡ ஞானம் வளர்வதற்கும் இத்தனை வழிகள் உள.

✡ புதிய லோகங்களைக் கண்டுபிடித்து பூகோளம் எழுதுவதற்கும் பல வழிகள் உள்ளன.

✡ விஞ்ஞானம் புதியன காணவும் இதுவே சட்டம்.

✡ உலகில் உள்ளது ஒரு சட்டம், பல துறைகள். அத்தனைத் துறைகளும் ஒரே சட்டத்தைப் பலவிதமாகப் பின்பற்றுகின்றன.

✡ உரையாடலுக்கும் இந்தச் சட்டத்தைக் கருதினால் அங்கும் இது செல்லும்என அறியலாம்.

✡ காதலிலக்கியம் உலகின் கவனத்தைக் கவர்ந்தது.

✡ உயர்ந்த காதல் எழுவது, சிறப்பது, பலன் தருவதும் பல்வகைகள்.

✡ அவை பின்பற்றுவதும் இதே சட்டம்.

✡ ஆண்டவனும், மனிதனும் பிரம்மத்தின் இரு முனைகள்என்பதால் செயல் எங்கிருந்தும் எழும்.

❀❀❀

**866) முதலில் சொல்லியது உணர்வு; அடுத்தது உயர்ந்த உணர்வு அல்லது சைத்தியப்புருஷன். அவதாரப்புருஷனை மட்டுமே ஆண்டவன் நிர்ப்பந்திக்கிறான்.**

*அவதாரப்புருஷனைமட்டுமே ஆண்டவன் நிர்ப்பந்திக்கிறான்.*



✡ நிர்ப்பந்தம் நாகரீகம் வளர்ந்த நிலையைக் காட்டும்.

✡ மக்கள் கல்வியை நாடுவது அவர்களைப்பொருத்தது.

✡ மேல்நாடுகளில் பையன் 16 வயதுவரை பள்ளிக்கு வாராவிட்டால், பெற்றோர் ஜெயிலுக்குப் போகவேண்டும்.

✡ பொதுமக்கள் கல்வி பெறவேண்டும்என்று சமூகம் கட்டாயப்படுத்த சமூகம் வளர்ந்து, கல்வியின் முக்கியத்துவத்தை அறிந்திருக்க வேண்டும்.

✡ இன்ஷூரன்ஸ் மக்கள் வசதிக்காக ஏற்பட்டது.

✡ கார் வாங்க கடன் கேட்டால், பாங்க் காரை இன்ஷூர் செய்யச்சொல்வது சமூகம் மறைமுகமாக மக்களைக் கட்டாயப் படுத்துவதாகும்.

✡ காலரா, அம்மை தடுப்புஊசிபோட சர்க்கார் நிர்ப்பந்தம்செய்வதும் உண்டு, செய்யாமலிருப்பதும் உண்டு.

✡ சமூகம் வளரும்முன் கட்டாயம் குறைவு.

✡ வளர்ந்தபின் கட்டாயம் அதிகம்.

✡ சமூகம் ஏற்படுமுன் (physical compulsion) எதிரியின் தாக்குதலை எதிர்க்க சமூகம் ஒவ்வொருவரையும் நிர்ப்பந்தம் செய்தது.

✡ திருமணம்செய்வது சட்டப்படி அவசியமில்லை.

✡ சமூகம் ஆயிரம் வகைகளாகக் கட்டாயப்படுத்துவதால் திருமணம் செய்துகொள்ள அபிப்பிராயமில்லாதவரும் செய்துகொள்கிறார்கள்.

- ❀ பிரம்மச்சாரிக்கு வாடகைவீடு கிடைக்காது.
- ❀ வயதான பிரம்மச்சாரிக்கு வேலைகொடுக்க எவரும் தயங்குவர்.
- ❀ பாங்க், சர்க்கார் ஆபீஸ், மற்ற எந்த இடத்திலும் பிரம்மச்சாரியை நம்பமாட்டார்கள்.
- ❀ எலக்ஷனில் நிற்பதற்கும் அது ஒரு பிரச்சினையாகும்.
- ❀ ஒரு ஸ்தாபனத்தில் தலைமைப்பதவிக்கு பிரம்மச்சாரியை விலக்கு-வார்கள்.

✡ **ஆண்டவன் தற்சமயம் நம்மையெல்லாம் கட்டாயப்படுத்தாத இடங்களில் அவதாரப்புருஷனைக் கட்டாயப்படுத்துகிறான்.**

✡ **எந்த விஷயத்தில் யார் கட்டாயப்படுத்தப்படுகிறார்என்பது அந்தச் சமுதாயத்தின் நாகரீகம் வளர்ந்த நிலையைக் காட்டும்.**

✡ **மேல்நாடுகளில் பைத்தியம்பிடித்தவர்களை வீட்டில் வைத்திருக்கச் சட்டம் அனுமதிக்காது.**

✡ **சுத்தம் தேவைப்பட்டால் சர்க்கார் மக்களை சுத்தமாக இருக்கும்படிக் கட்டாயப்படுத்தும்.**

✡ **சிங்கப்பூரில் உள்ள சுத்தம் நம் நாட்டிலில்லை.**

✡ **SARSஎன்ற புது வியாதி வந்தவுடன் சிங்கப்பூரில் அவர்கள் வீட்டைவிட்டு வெளியே போகக்கூடாதுஎனச் சட்டம் வந்துவிட்டது.**

*தொடரும்.....*

❀❀❀

## ஜீவிய மணி

**ஒரு மணி அரிசி தங்கமணியாகும்.**

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மற்றவர் சொல்வதின் உண்மையை அறிவது பெருந்தன்மை. ஆனால், அது மனத்தைக்கடந்து செல்ல உதவாது. அடுத்தவர் சொல்வதின் உண்மையையும், தவற்றையும் கண்டு, அவை எதன் பாகங்களென அறிந்து, அந்த முழுமையைக் காண முனைந்தால், மனத்தைக்கடந்து செல்லமுடியும்.

***மற்றவர் முழுமையை அறிந்தால் மனத்தைக் கடக்கலாம்.***





# 4 + 8 = 3,00,000

சமர்ப்பணன்

குளிருக்குப் பயந்து சூரியன் வெளிவரத் தயங்கிக்கொண்டிருந்த இருள் பிரியாத அதிகாலை நேரத்தில் அழைப்புமணி ஒலித்தது.

பேப்பர் போடும் பையனை எதிர்பார்த்து கதவைத் திறந்த எனக்கு பகீரென்றது.

வாயாவி வள்ளியப்பன் வாயெல்லாம் பல்லாக நின்றுகொண்டிருந்தார். இவர் என் மனைவியின் ஒன்றுவிட்ட சித்தப்பா. ஆனால், எல்லோரும் இவரை வாயாவிமாமாஎன்றுதான் அழைப்பார்கள்.

வலுக்கட்டாயமாக வரவழைத்துக்கொண்ட சிரிப்புடன், “வாருங்கள் மாமா”என்று வரவேற்றேன்.

“சௌக்கியம்தானே, சந்துரு தம்பி?”என்று நலம் விசாரித்தவாறு மூட்டை முடிச்சுகளோடு வீட்டினுள் நுழைந்தார் வாயாவிமாமா.

அதென்ன வாயாவிமாமாஎன்ற வித்தியாசமான பெயர்என்று கேட்கிறீர்களா? எத்தனையோ வகையான சிரமங்களை மேற்கொண்டு, விதவிதமான பணிவிடைகளை குருவிற்குப் பல வருடங்கள் செய்து, மந்திரஜால, இந்திரஜால, யந்திரஜால வித்தைகளைக் கற்று கொண்டவரை மாயாவிஎன்பார்கள். மாமா வள்ளியப்பனோ இந்த இரகசியக்கலைகளின் அரிச்சுவடிகூட அறியாமல், எப்பேர்ப்பட்ட மாயாவியையும் தம் வாய் ஜாலத்தாலேயே தவிடுபொடியாக்கி, தலைகுனிய வைத்துவிடுவார். அதனால், இவருக்கு வாயாவிமாமாஎன்ற காரணப்பெயர் ஏற்பட்டுவிட்டது.

எனவே, நவீன நாரதரான வாயாவிமாமா வீட்டுக்கு வந்ததில் எனக்குப் பெரிய அதிர்ச்சி உண்டானதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

என் மனைவி சுதாவிற்கு உற்சாகம் கரைபுரண்டோடியது. மின்னல் வேகத்தில் நறுமணம் வீசும் டிகாக்ஷன்காபியை தயார்செய்து, வீட்டில் இருந்ததிலேயே மிகப்பெரிய தம்ளரில் விளிம்புவரை தளும்பக் கொண்டு வந்து வாயாவிமாமாவிற்கு அன்புடன் கொடுத்தாள்.

அது என்ன மாயமோ தெரியவில்லை, என் உறவினர்கள் வந்தால் மட்டும் காபி சிறிது நீராகவும், சர்க்கரை சற்றுக் குறைவாகவும், தம்ளர் சின்னதாகவும் மாறிவிடும். இதுபோன்ற விஷயங்களைப்பற்றி பேச்செடுத்தால், நாட்டில் விலைவாசி உயர்வைப்பற்றியும், அதை ஈடுகட்ட முடியாத என் வளராத வருமானம்பற்றியும் சுதாவின் விரிவுரைகளைக் கேட்க நேரிடும்என்பதால், வாய் திறவாமல் வாழக் கற்றுக்கொண்டு விட்டேன்.

காபி தம்ளரை வாங்கிக்கொண்ட வாயாவிமாமா, அதைத் துளித்துளியாக இரசித்து, ருசித்து, சுவைத்துக் குடித்தார்.

‘‘ஏனம்மா சுதா, நீ தம்ளரைத் தரும்போது, உன் கைகளை கவனித்தேன். தங்கவளையல்களில் பளபளப்பு குறைவாக இருக்கிறதே!'' என்றார்.

“என்ன செய்வது மாமா? புதிதாக வாங்கி இருந்தால் பளபளப்பாக இருக்கும். அப்பா போட்ட வளையல்களுக்கு வயதாகிவிட்டதல்லவா?” என்றாள் சுதா.

‘‘நீ என்ன சொல்கிறாய்? சந்துரு தம்பி உனக்கு புதுநகைகள் எதுவுமே வாங்கித் தந்ததில்லையா?''என்று அதிர்ச்சியுடன் கேட்டார் வாயாவிமாமா.

“அப்பா தந்த நகைகளை இவர் அடகுவைக்காமல் இருப்பதே எனக்கு கிடைத்த அதிர்ஷ்டம்”என்று இலேசாக கண்கலங்கினாள் சுதா.

“என்ன மாப்பிள்ளை, குழந்தையை இப்படி அழவைக்கிறீங்களே!” என்று வருத்தப்பட்டார் மாமா.

சும்மா இருந்த சங்கை ஊதிக்கெடுத்துவிட்டு மாமா இப்படிப் பேசியது எனக்குச் சுருக்கென்றது. பெரியவர்களை எதிர்த்துப் பேசிப்



பழக்கம் இல்லாததால், மாமாவை மனதிற்குள் திட்டினாலும், வெளியே மௌனமாக இருந்தேன்.

“சுதா, நீ அழாதேம்மா. இது சாதாரண விஷயம். நான் சொல்கிறபடி செய்தால் நீ கூடியசீக்கிரம் புதிய வைரவளையல்களே போடலாம்”என்றார் வாயாவிமாமா.

சுதாவின் முகம் மலர்ந்தது. கண்களில் ஒரு புதிய ஒளி. ‘‘எதுவானாலும் சொல்லுங்கள் மாமா. இவரை உடனே செய்ய வைக்கிறேன்''என்றாள் சுதா.

சரிதான்!

“பெண்களுக்குப் புன்னகையே பொன்னகை”என்று சொன்னேன்.

“அதெல்லாம் நன்றாக நிறைய சம்பாதித்து, மனைவிக்கு நகை வாங்கித்தாராத கணவர்கள் சொல்லும் வெறும் சாக்கு”என்றாள் சுதா.

“சரியாகச் சொன்னாய்”என்று சுதாவை பாராட்டினார் வாயாவிமாமா.

எனக்கு என்ன பதில் சொல்வதுஎன்றே தெரியவில்லை.

“மாமா, போன வாரம் கீதாவின் கல்யாணத்திற்குப் போயிருந்தேன். அங்கே அவள் போட்டிருந்த அழகான வைரசெட்டைப் பார்த்ததிலிருந்து எனக்கும் வைரநகை ஏதேனும் வாங்கவேண்டும்என்று தோன்றிவிட்டது. நான் அதைப்பற்றியேதான் நான்கைந்து நாட்களாக நினைத்துக் கொண்டிருந்தேன். நேற்று இவரிடம்கூட அதைப்பற்றிச் சொன்னேன்” என்றாள் சுதா.

“ஆமாம், நான்கூட நம் நிலைக்கு அதெல்லாம் சரிவாராதுஎன்று சொன்னேன். நீங்களும் சுதாவுக்கு எடுத்துச்சொல்லுங்கள்''என்று வாயாவிமாமாவைக் கேட்டுக்கொண்டேன்.

“சரி மாமா, வைரசெட்டை விட்டுவிடுங்கள். வைரவளையல்களுக்குக் கூடவா எனக்குத் தகுதி இல்லாமல் போய்விட்டது?”என்று கேட்டாள் சுதா.

“உனக்குப் பிடித்த கடையில், பிடித்த டிசைனில் வைரவளையல்கள் வாங்கவேண்டுமென்றால் நிறைய பணம் வேண்டும்''என்றார் வாயாவிமாமா.

“அப்படிச் சொல்லுங்கள் மாமா, யாரிடம் இருக்கிறது பணம்?”என்று சொன்னேன். வாயாவிமாமாவின்மீது இலேசாகப் பிரியம் வந்தது போலிருந்தது.

“பணத்திற்கு ஒரு குணம் இருக்கிறது. நாம் பிறருக்குத் தரவேண்டிய பணம் ஏதேனும் பாக்கியாக இருந்தால், ஒரு பைசா பாக்கி இல்லாமல் திருப்பித் தந்துவிடவேண்டும். அப்படிச் செய்தால், பணம் நம்மைத் தேடி எங்கிருந்தோ வரும்”என்றார் வாயாவிமாமா.

சற்றுமுன் வாயாவிமாமாவின்மீது வந்த பிரியம் விடைபெற்றுக் கொண்டது.

“மாமா, கடன் பிரச்சினை இங்கே எப்போதுமே வாராது. இவரை நம்பி யார் கடன் தரப்போகிறார்கள்? கடன் கிடைத்தால்தானே திருப்பித் தருவதுஎன்ற கேள்வியே வரும்”என்று திருவாய் மலர்ந்தருளினாள் என் தர்மபத்தினி.

‘‘என்ன தம்பி, கடன் வாங்கக்கூட சாமர்த்தியமில்லாமல் இருக்கிறீர்களே’’என்று என்னைப் பார்த்து அனுதாபப்பட்டார் வாயாவிமாமா.

“மாமா, அப்படியே நான் கடன் வாங்கியிருந்தாலும், பணமில்லாத போது எப்படித் திருப்பித்தருவது? நீங்கள் சொல்லும் யோசனை ஏற்கனவே கஷ்டப்படுபவனுக்கு எப்படிப் பயன்படும்?”என்று மாமாவைக் கேட்டேன். மாமாவின் வாயை மூட புத்திசாலித்தனமாக ஒரு கேள்வி கிடைத்ததில் எனக்குப் பரமசந்தோஷம்.

“குதர்க்கம் பேசாமல் மாமா பேசுவதைக் கவனமாகக் கேளுங்கள்” என்று என்னை முறைத்த சுதா, “மாமா, இவருக்குத் தானாக எதுவும் தெரியாது. அடுத்தவர்கள் எடுத்துச்சொன்னாலும் புரியாது”என்றாள்.

“தம்பியின் கேள்விக்குப் பதில் சொல்வது சுலபம். அது மனநிலை சம்பந்தப்பட்டது. அதைப்பற்றி அப்புறம் பேசிக்கொள்ளலாம். நமக்குப் புதிய நகைகள் வாங்கவேண்டும். இப்போது அதுதான் முக்கியம்”என்றார் மாமா.

“ஆமாம், ஆமாம்”என்று ஒத்து ஊதினாள் சுதா.



“நமக்கு வரவேண்டிய பணம் ஏதேனும் விட்டுப்போயிருந்தால், ஒரு பைசாவானாலும், கவனமாக அதை வாங்கிவிடவேண்டும். அப்படிச் செய்தால் பணம் பெருகும்”என்றார் மாமா.

சுதாவின் கண்களில் ஏமாற்றம் தெரிந்தது.

“இவர் கொடுக்கல், வாங்கல் யாரிடமும் வைத்துக்கொள்ளமாட்டார். அதனால், வரவேண்டிய பணம்என்று எதுவுமில்லை”என்றாள் சுதா.

“அப்படிச் சொல்லாதே. ஏதாவது நிச்சயம் இருக்கும். யோசித்தால் ஏதாவது பழைய வங்கிக்கணக்கு, பலசரக்குக்கணக்குஎன்று ஞாபகம் வரும்”என்றார் வாயாவிமாமா.

“ஏங்க, மாமா சொல்வதைக் கேட்டீர்களா? யோசனை செய்து பாருங்களேன்”என்றாள் சுதா.

சுதாவைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருந்தது. படித்த பெண்ணாக இருந்துகொண்டு, எவ்வளவு பாமரத்தனமாக இருக்கிறாள். இவளைப்போல நான்குபேர் கிடைத்தால், வாயாவிமாமாபோன்ற ஆசாமிகளுக்குக் கொண்டாட்டம்தான்.

மாமா எப்படியோ போகட்டும். என்னை நம்பி வாழும் என் மனைவியை திருப்திசெய்யவேண்டும். எனக்கு அதுதான் முக்கியம்.

சிறிது யோசித்துவிட்டு, “பத்து வருடங்களுக்குமுன்னால் ஒரு சேமிப்பு கணக்கு வைத்திருந்தேன். அதை உபயோகித்து ஆறு வருடங்களாகி விட்டன”என்றேன்.

“அதில் எவ்வளவு மீதி இருக்கும்?”என்று கேட்டார் வாயாவிமாமா.

“நான்கு ரூபாய்கள் இருக்கும். அதில் எப்படி வைரவளையல் வாங்க முடியும்?”என்று சிரித்தேன்.

“நான் வைரநகை வாங்கநினைப்பது உங்களுக்குக் கேலியாக இருக்கிறதா?”என்றாள் சுதா.

“கோபப்படாதே சுதா, காரியம் கெட்டுவிடும்”என்ற மாமா, “சந்துரு தம்பி, கங்கை நதி பொங்கும்போது பார்த்திருக்கிறீர்களா?’’என்று கேட்டார்.

“பிரம்மாண்டமாக இருக்கும். கங்கை கடலா, நதியாஎன்ற சந்தேகம் வந்துவிடும்’’என்றேன்.

‘‘கங்கை உருவாகும் இடத்தைப் பார்த்திருக்கிறீர்களா?’’என்று கேட்டார்.

“ஒரு சின்ன துவாரத்தில் இருந்து ஊற்றாக நீர் பீரிட்டுவரும்’’ என்றேன்.

“எல்லா விஷயமும் அப்படித்தான். ஆரம்பத்தில் பார்ப்பதற்கு ஒரு சின்ன நீரூற்றுபோலிருக்கும். அதைத் தொடர்ந்து சென்றால் கங்கைபோல் விரியும்’’என்றார் வாயாவிமாமா.

“பணத்தையும், கங்கையையும் ஒப்பிடுவது சரி வாராது”என்றேன்.

“பணத்தை கங்கையைப்போல் நீங்கள் பார்க்காததால் இப்படிப் பேசுகிறீர்கள். ஒவ்வொரு ரூபாயிற்கும்பின்னால் பிரம்மாண்டமான பணவெள்ளம் இருக்கிறதுஎன்பதை அந்த ஒரு ரூபாயைப் பார்க்கும்போது மனதில் ஏற்றுக்கொள்ளவேண்டும்”என்றார் வாயாவிமாமா.

‘‘அப்படி ஏற்றுக்கொண்டால் நகை வந்துவிடுமா?’’என்று அடக்கமாட்டாத ஆர்வத்துடன் கேட்டாள் சுதா.

“முதலில் நமக்கும் பணம் வரும்என்று நம்பவேண்டும். அளவில் சிறியதின்பின்னே அளவற்ற பெரியது எப்போதும் உண்டுஎன்பதை மனமார ஏற்றுக்கொள்ளவேண்டும். ஏற்றுக்கொண்டதை உணர்வாலும், செயலாலும் நிறைவுசெய்யவேண்டும்”என்றார் வாயாவிமாமா.

“அதை எப்படிச் செய்வது?”என்று கேட்டாள் சுதா.

“பெரியதொகைஎன்றால் ஆர்வத்துடன் முயற்சிஎடுப்போம். சிறிய தொகைஎன்றால் அலட்சியம்செய்வோம். சிறிய ஊற்றே கங்கைஎன்பதை ஏற்பதுபோல, சிறியதொகையே பெரியதொகைஎன்பதை ஏற்றுக்கொண்டு, அந்தச் சிறியதொகையைத் திருப்பிவாங்க எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும். அவ்வளவுதான் நீ செய்யவேண்டியது”என்றார் வாயாவிமாமா.

“இது மிகவும் சுலபமாக இருக்கிறதே”என்றாள் சுதா.

எனக்குக் கோபம் வந்தது. “உனக்குச் சுலபம்தான் சுதா. ஏனென்றால் செய்யப்போவது நானல்லவா?”என்றேன்.



“இதிலென்ன சிரமம்?”என்று கேட்டாள் சுதா.

‘‘நான் சென்னையில் பெரிய கம்பெனியில் மானேஜராக இருக்கிறேன். பழைய பாங்க் கணக்கு திண்டிவனத்தில் இருக்கிறது. ஆபீசுக்கு விடுப்பு எடுத்துக்கொண்டு, இருநூறு ரூபாய்கள் செலவுசெய்து, நான்கு ரூபாய்களை வசூலிக்கவேண்டும். இது முட்டாள்தனமாகத் தெரியவில்லையா?’’என்றேன்.

“இருநூறுதானே! செய்துதான் பார்ப்போமே”என்று உற்சாகமாகச் சொன்னாள் சுதா.

‘‘செலவுகூட பெரிய விஷயமில்லை. வெட்கமில்லாமல் நான்கு ரூபாய்களுக்காக பாங்க்கில் வரிசையில் நின்றால் மானம்போகும்’’ என்றேன்.

கேஷியர் நமுட்டுச்சிரிப்புடன் நான்கு ரூபாய்கள் தருவதுபோலவும், பிறவாடிக்கையாளர்கள் என்னைக் கேலியாகப் பார்ப்பதுபோலவும் மனக்கண்ணில் காட்சி தோன்றியது. பாங்க்கில் படப்போகும் அவமானம் எனக்கு இப்போதே வந்துவிட்டது.

“இதோ பாருங்கள், வறட்டுகௌரவம்பார்த்து இதுவரை என்ன சாதித்தோம்? உங்களுக்குச் சிரமமாக இருந்தால் எனக்கு அனுமதி கடிதம் கொடுங்கள். நான் திண்டிவனம் போய் நான்கு ரூபாய்களை வாங்கிவருகிறேன்”என்று படபடத்தாள் சுதா.

‘‘சந்துரு தம்பி, செலவுசெய்யும் தொகையோ, வரவேண்டிய தொகையோ முக்கியம் இல்லை. நம் மனநிலையில்தான் இரகசியமே இருக்கின்றது. மனநிலை மாறிவிட்டால்போதும்”என்றார் வாயாவிமாமா.

“எனக்கு பணநிலை மாறினால்போதும். சுதா ஆசைப்படுவதால் நான்கு ரூபாய்களை வாங்க முயற்சிசெய்கிறேன்’’என்று வேண்டா வெறுப்பாகச் சொன்னேன்.

“மாமா, அவரை விடுங்கள். நான் என் மனநிலையை மாற்றிக் கொள்கிறேன். இனிமேல் ஒரு ரூபாயானாலும் கவனமாக இருப்பேன். சிறுதுரும்பையும் அலட்சியம் செய்யமாட்டேன். வீண்கௌரவம் பார்க்க மாட்டேன்”என்று சூளுரைத்தாள் சுதா.

“நீ மாறினால் உனக்கு நடந்துவிடும். உன் ஆதரவால் சந்துரு தம்பிக்கும் நல்லது நடக்கும்”என்றார் மாமா.

“எனக்குப் பெரிய கப்பல் வாங்க ஆசையாக இருக்கிறது. என் ஆசை நிறைவேறுமா?”என்று அப்பாவியாக முகத்தை வைத்துக்கொண்டு கேட்டேன்.

“**நாம் உண்மையாக, மனமார எதை விரும்புகிறோமோ, அது நமக்கு நிச்சயமாகக் கிடைத்துவிடும்**”என்றார் மாமா.

எனக்கு ஒரே கசப்பாக இருந்தது. அபத்தமாகப் பேசுவதற்கும் ஓர் அளவுவேண்டாமா?

நல்லவேளையாகத் தொலைபேசி மணி ஒலித்தது.

சீனியர்மானேஜர் பேசினார்.

“சந்துரு, உளுந்தூர்பேட்டைக் கிளையில் இன்று மாலை ஆண்டுவிழா. எனக்கு வேறு வேலை வந்துவிட்டது. தயவுசெய்து நீங்கள்தான் எனக்கு பதிலாகப் போய் தலைமை ஏற்கவேண்டும். என் காரையும், டிரைவரையும் உபயோகித்துக்கொள்ளுங்கள். கூட என் உதவியாளரும் வருவார்”என்று பணிவுடன் உத்தரவிட்டார்.

விஷயத்தைக் கேள்விப்பட்ட வாயாவிமாமாவிற்கு ஒரே சிரிப்பு. ‘‘சந்துரு தம்பி, இது நல்லசகுனம். உளுந்தூர்பேட்டை போகும் வழியில்தான் திண்டிவனம் இருக்கிறது. மறக்காமல் நான்கு ரூபாய்களை வாங்கிவாருங்கள்”என்று கூறினார்.

உளுந்தூர்பேட்டைக் கிளை விழாவிற்குத் தலைமை ஏற்பதால், ஏதோ நான் இந்தியாவிற்கே பிரதமமந்திரி ஆகிவிட்டதுபோல சுதாவிற்கு ஒரே பெருமை. கணவருக்கோ, குழந்தைகளுக்கோ ஓர் உயர்வு வந்துவிட்டால், பெண்களுக்கு ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது.

எனக்கு மாமாமீது கோபம் பொத்துக்கொண்டு வந்தாலும், இவர் தொந்தரவிலிருந்து ஒரு நாள் தப்பித்துக்கொள்ள உளுந்தூர்பேட்டைப் பயணம் உதவியாக இருக்கும்என்று தோன்றியது.

✡✡✡



காரில் திண்டிவனம் போய்ச்சேரும்வரை மனதிற்குள் ஒரே குழப்பம். உதவியாளருக்குத் தெரியாமல் எப்படி பாங்க்கில் பணம் வாங்குவது? நான் நான்கு ரூபாய்களை வசூலித்தது உதவியாளருக்குத் தெரிந்தால், அலுவலகம் முழுவதும் செய்தி பரவிவிடும். அப்புறம் மானம், மரியாதை எல்லாம் கடலில் கலந்த உப்பாகிவிடும். இருந்தாலும் சுதாவை திருப்தி செய்யவேண்டுமே!

“டிரைவர், அதோ அந்த பாங்க்கில் ஒரு சின்னவேலை இருக்கிறது. கொஞ்சம் நிறுத்துங்கள்”என்றேன்.

உதவியாளர், ‘‘சார், பக்கத்துத்தெருவில் என் மைத்துனர் இருக்கிறார். நீங்கள் அனுமதித்தால் பார்த்துவிட்டு அரைமணி நேரத்தில் வந்துவிடுகிறேன்”என்று கெஞ்சும் குரலில் அனுமதி கேட்டார்.

எப்பேர்ப்பட்ட அதிர்ஷ்டசாலி நான்! சந்தோஷமாகத் தலையசைத்து விட்டு, பாங்க்கிற்குள் நுழைந்தேன்.

பாங்க் அதிகாரியிடம் என் பழைய பாஸ் புக்கைத் தயக்கத்துடன் தந்தேன்.

‘‘சார், நான் ஆறு வருடங்களாக இந்தக் கணக்கை உபயோகிக்கவில்லை. எவ்வளவு கணக்கில் இருக்கிறதுஎன்று தெரியவில்லை”என்றேன்.

கம்ப்யூட்டரில் கணக்கைப் பார்த்த பாங்க் அதிகாரி, ‘‘உங்கள் கணக்கில் நான்கு ரூபாய்கள் இருக்கின்றன”என்றார்.

“இவ்வளவுதானா! பெரியதொகையாக இருந்தால் எடுக்கலாம்என்று தான் சென்னையிலிருந்து வந்தேன். இது யாருக்கு வேண்டும்?”என்றேன். மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள ஒரு சிறியபொய் சொல்வதில் தவறில்லை.

‘‘எதுவானாலும் உங்கள் பணம்தானே! கணக்கை முடித்துக் கொண்டால் நான்கு ரூபாய்களைத் திருப்பித் தந்துவிடுகிறேன்”என்றார் பாங்க் அதிகாரி.

“இது வந்து என்ன ஆகப்போகிறது? பரவாயில்லை, கணக்கை முடித்துவிடுங்கள்!”என்றேன்.

கையெழுத்து வாங்கிக்கொண்டு நான்கு ரூபாய்களைத் தந்தார் பாங்க் அதிகாரி. கூடவே, ஏதோ ஒரு பழைய செக்கையும் நீட்டினார்.

“சார், நீங்கள் ஆறு வருடங்களுக்குமுன்பு போட்ட டிவிடெண்ட் செக் தேதி தள்ளிப்போனதால் திரும்பிவந்துவிட்டது. இதை அந்தக் கம்பெனிக்கு நீங்கள் திருப்பிஅனுப்பினால், அவர்கள் புதுசெக் தருவார்கள்”என்றார் பாங்க் அதிகாரி.

அது என்ன செக்என்று எனக்கு ஞாபகமே இல்லை. செக்கை ஆர்வத்துடன் பார்த்தேன்.

எட்டு ரூபாய்கள்! எட்டே எட்டு ரூபாய்கள்! எட்டாயிரமாக இருந்திருக்கக்கூடாதா?

ஏமாற்றமாக இருந்தது.

எப்படியோ சாமர்த்தியமாகப் பேசி மானம்போகாமல் தப்பிவிட்டேன். அதுவே பெரியநிம்மதி.

பாங்க்கைவிட்டு வெளியே வரும்போது செல்போன் ஒலித்தது. சீனியர்மானேஜர் பேசினார். “சந்துரு, என் அவசர வேலை முடிந்து விட்டது. நானே விழாவிற்குப் போகிறேன். உதவியாளரைக் காரில் உளுந்தூர்பேட்டை போகச்சொல்லுங்கள். நீங்கள் சென்னைக்கு பஸ்ஸில் திரும்பிவிடுங்கள்”என்றார்.

சீனியர்மானேஜர் என்னைவிடவும் பெரியஅதிகாரி. அவர் எது சொன்னாலும் எனக்கு ஒன்றுமில்லை. ஆனால், உதவியாளரும், மாமாவும் கேலியாக நினைப்பார்களேஎன்ற எண்ணம் என்னை வருத்தியது.

நான் நலிந்தகுரலில் உதவியாளரிடம் விஷயத்தைச் சொன்னதும், “உங்களைப் பேருந்துநிலையத்தில் இறக்கிவிடுகிறேன். காரில் ஏறுங்கள்” என்றார்.

✡✡✡

சுதாவிற்கு ஒருபுறம் நான் நான்கு ரூபாய்களை திரும்பவாங்கியதில் மகிழ்ச்சி, மறுபுறம் சீனியர்மானேஜர் என்னை விழாவிற்கு வரவேண்டாம் என்று சொல்லி பஸ்ஸில் திரும்ப வரவழைத்ததில் வருத்தம்.



“சந்துரு தம்பி, நாம் முக்கியமான காரியங்கள் செய்யும்போது, தெரிந்தோ தெரியாமலோ ஏதேனும் தவறுசெய்தால் காரியம் கெட்டுப் போகும். யோசித்துபார்த்தால் காரில் போன நீங்கள் பஸ்ஸில் ஏன் திரும்பினீர்கள்என்று விளங்கிவிடும்”என்றார் வாயாவிமாமா.

“சீனியர்மானேஜர் காரில் போகச்சொன்னார், போனேன். பஸ்ஸில் திரும்பச்சொன்னார், திரும்பினேன். இதில் யோசிக்க என்ன இருக்கிறது?”என்று எரிச்சலுடன் சொன்னேன். ஏற்கனவே அவமானப் பட்டிருக்கும் எனக்கு மாமாவின் வார்த்தைகள் எரிச்சலூட்டின.

“சந்துரு தம்பி, நிகழ்ச்சிகளுக்கும், நமக்கும் உள்ள தொடர்பை புரிந்துகொண்டால், பிரச்சினைகளைத் தீர்க்கும் சக்தி நமக்கு வந்துவிடும். அதற்காகத்தான் சொன்னேன்”என்றார் வாயாவிமாமா.

“கொஞ்சம்விட்டால் தொண்டைகமறலுக்கும், செருமலுக்கும்கூட அர்த்தமுண்டுஎன்று சொல்வீர்கள்போலிருக்கிறதே”என்றேன்.

“ஒரு காரியத்தைப்பற்றிப் பேசும்போது, செருமலோ, இருமலோ வந்தால், நிதானிக்கவேண்டும். கேட்பவரிடமோ, விஷயத்திலோ, சூழலிலோ, நம்மிடமோ ஏதோ தடை இருக்கிறதுஎன்று புரிந்துகொண்டு, செயல்படவேண்டும்”என்றார் வாயாவிமாமா.

இவரிடம் பேசிப் பயனில்லைஎன்று புரிந்தது.

“சுதா, நீ சொன்னபடி செய்துவிட்டேன், ஆளைவிடு”என்றேன்.

“அதெப்படி தம்பி விடமுடியும்? இப்போதுதானே விஷயமே ஆரம்பமாகி இருக்கிறது. இந்த எட்டு ரூபாய்களை வாங்கவேண்டாமா? நாளை முதல் காரியமாக இந்தக் கம்பெனிக்குப் போய் வேறு செக் வாங்கி விடுங்கள்”என்றார் வாயாவிமாமா.

நான் எதுவும் சொல்வதற்குமுன், தன் கண்களால் எனக்கு உத்தரவிட்டாள் என் இல்லத்தரசி. நம் முன்னோர்கள் ‘கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்’என்ற பழமொழியை ஓர் உயர்ந்த கருத்தைப் புரியவைப்பதற்காகச் சொன்னார்கள். தமிழ்நாட்டுப் பெண்களோ இந்தப் பழமொழியை விபரீதமாகப் புரிந்துகொண்டு, கணவனை கல்லாகவும், புல்லாகவும் நடத்துகிறார்கள். இந்தக் குறையை எந்த மனுநீதிச் சோழனிடம் சொல்வது?

''தம்பி, நான் இன்று இரவு மும்பாய் போகவேண்டும். என் அண்ணன் பெண்ணுக்குப் பெரிய வரன் வந்திருப்பதாக இன்று தகவல் கிடைத்தது. அதை விசாரிக்கவேண்டும். வேறு வேலைகளும் இருக்கின்றன. ஒரு மாதம்கழித்து மீண்டும் வருகிறேன்''என்றார் வாயாவிமாமா.

விட்டது தொல்லை!

✡✡✡

மறுநாள் முதல்காரியமாக எட்டு ரூபாய் கம்பெனிக்குச் சென்றேன். சுதாவிடம் இருந்து தப்பமுடியுமா?

மிகவும் பணக்காரக்கம்பெனிபோலிருக்கிறது. அங்கிருந்த காவலாளி போட்டிருந்த உடை, நான் முக்கியமான விசேஷங்களுக்குப் போடும் உடையைவிடச் சிறப்பாக இருந்தது.

தயக்கத்துடன் வரவேற்பு மேஜையை அணுகினேன்.

என் நெஞ்சே வெடித்துவிடும்போலிருந்தது. வரவேற்பாளர் ஓர் ஆண்பிள்ளையாக இருக்கக்கூடாதா? அழகான இளம்பெண்ணாகவா இருக்கவேண்டும்!

கடவுளே, என்ன சோதனை இது! ஒரு இளம்பெண்ணிடம் எனக்கு எட்டு ரூபாய்கள் வேண்டும்என்று எப்படிச் சொல்வது?

எப்படிப் பேச்சை ஆரம்பிப்பதுஎன்ற தடுமாற்றத்துடன், அப்பெண்ணிடம் பழையசெக்கை நீட்டினேன். ஏதேனும் அற்புதம் நிகழ்ந்து, நான் அந்த இடத்திலிருந்து மறைந்துவிட்டால் தேவலைபோலிருந்தது.

வரவேற்புப்பெண் நன்றாகப் பயிற்சிபெற்றவள்போலும். நட்புடன் புன்னகைத்து, ''கொஞ்சம் காத்திருங்கள். நான் மேலதிகாரியிடம் கேட்டுவிட்டு உங்களுக்குச் சொல்கிறேன்''என்று கூறினாள்.

வரவேற்பறையிலிருந்த வசதியான இருக்கையில் கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்துகொண்டேன். அந்தப் பெண்ணின் கண்களைப் பார்க்க வெட்கமாக இருந்தது. எட்டு ரூபாய்களை வாங்க வந்த என்னைப்பற்றி எவ்வளவு மட்டமாக நினைக்கிறாளோ?



பத்து நிமிடங்கள்கழித்து வரவேற்புப்பெண் என்னைப் புன்னகையுடன் அழைத்தாள்.

“சார், நீங்கள் வீடு மாற்றியபோது புதிய விலாசம் தரவில்லையா?” என்று கேட்டாள்.

“இல்லை, மறந்துவிட்டேன்”என்று அசடுவழிந்தேன்.

''நாங்கள் ஏழெட்டு முறைகள் உங்களுக்குக் கடிதங்கள் அனுப்பினோம். எல்லாமே திரும்பிவந்துவிட்டன''என்றாள்.

என்ன முட்டாள்தனம் இது! எட்டு ரூபாய்களுக்காக ஏழெட்டு தடவைகள் கடிதம் போடுவார்களா? இப்படியா கம்பெனியை நடத்துவது?

என் எண்ணஓட்டத்தைப் புரிந்துகொண்ட வரவேற்புப்பெண், “எங்கள் கம்பெனியில் பிறருக்குத் தரவேண்டிய தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும், தேடிக்கொண்டுபோய் கொடுத்துவிடுவோம்”என்றாள்.

ஒருவேளை அதனால்தான் இந்தக் கம்பெனி செல்வசெழிப்புடன் இருக்கிறதோ?

இந்த விஷயத்தை சுதாவிடமும், மாமாவிடமும் சொல்லக்கூடாது. சொன்னால் மாமாவுக்கு வெற்றிகிடைத்ததுபோலாகிவிடும்.

“அது நல்லபழக்கம். அதை விடாமல் தொடர்ந்து கடைப்பிடியுங்கள்” என்று உபசாரமாகச் சொன்னேன். நாம் செய்யாததைப் பிறரிடம் செய்யச் சொல்வதில் கிடைக்கும் இன்பம் அலாதியானது.

“ஆறு வருடங்களுக்குமுன் நீங்கள் வைத்திருந்த நூறு ஷேர்களுக்கு, இருநூறு போனஸ் ஷேர்கள் தந்தோம். உங்கள் சரியான விலாசம் எங்களிடம் இல்லாததால், உங்களுக்குத் தகவல் சொல்லவில்லை. போனஸ் ஷேர்கள் உங்கள் பெயரில் இருப்பது உங்களுக்குத் தெரியாததால், அவற்றை நீங்கள் விற்கவில்லை”என்றாள் வரவேற்புப்பெண்.

“இருநூறு போனஸ் ஷேர்கள் என் பெயரில் இருக்கின்றனவா?” என்று சந்தேகமாகக் கேட்டேன்.

“இந்த ஆறு வருடங்களில் இரண்டுமுறை போனஸ் ஷேர்கள் தந்திருக்கிறோம். இப்போது மொத்தமாக உங்கள் பெயரில் அறுநூறு ஷேர்கள் இருக்கின்றன”என்றாள் வரவேற்புப்பெண்.

திடீரென்று எனக்குப் புதியபலம் வந்துவிட்டது. வரவேற்புப்பெண்ணை தைரியமாக ஏறிட்டுப்பார்த்தேன்.

“உங்கள் கம்பெனி ஷேரை இப்போது எவ்வளவு விலைக்கு பங்கு மார்க்கெட்டில் விற்கமுடியும்?”என்று கேட்டேன்.

‘‘அதென்ன உங்கள் கம்பெனிஎன்கிறீர்கள்? நீங்களும் பங்கு வைத்திருக்கிறீர்களே! நம் கம்பெனிஎன்று சொல்லுங்கள். ஒரு ஷேர் ஐநூறு ரூபாய்க்குமேல் விற்கிறது. எல்லா ஷேர்களையும் விற்றால் உங்களுக்கு மூன்று இலட்சங்கள் வரும்”என்றாள் வரவேற்புப்பெண்.

✡✡✡

அடுத்தமாதம் வாயாவிமாமா வீட்டிற்கு வந்தபோது, சுதா வழக்கம்போல் மின்னல்வேகத்தில் நறுமணம் வீசும் டிகாக்ஷன்காபியை தயார்செய்து வீட்டில் இருந்ததிலேயே மிகப்பெரிய தம்ளரில் விளிம்புவரை தளும்ப கொண்டுவந்து வாயாவிமாமாவிற்கு அன்புடன் கொடுத்தாள்.

ஒரு சின்னவித்தியாசம். சுதாவின் கைகளில் பழைய தங்கவளையல்கள் இல்லை. புதிய வைரவளையல்கள் மின்னின!

*முற்றும்.*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உயர்ந்த கருத்து அறிவை விசாலப்படுத்தும். ஆழ்ந்த உணர்வு ஜீவியத்தை மாற்றும். நிதானமான உணர்வு உடலையும் மாற்றும். தான் மாற விரும்பும் மனிதனால் பிறரை மாற்ற முடியும்.

***மனிதன் தன்னைமட்டுமே மாற்றவேண்டும்.***



# எங்கள் குடும்பம் II

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

**ஓரிரு மாதங்களில் கேட்காமல் டெப்பாசிட் நாம் வசூல் செய்ய நினைத்ததற்கு அதிகமாக வந்துவிட்டது... பார்ட்னரும், கணவரும் ஆச்சரியத்தில் மூழ்கினர்:**

- ✡ **பணம், சொத்து, அந்தஸ்து, நாணயம் ஆகியவை தொடர்புள்ளவை. சொத்துள்ளவனுக்குக் கடன்தர எவரும் பிரியப்படுவர். அந்தஸ்து அடுத்த உயர்ந்த கட்டம். நாணயம் முடிவான கட்டம். நம் அனுபவத்தில் பணமும், சொத்தும் உள்ளவனுக்கு நாணயம் அதிக மரியாதை தரும். அன்னைவாழ்வில் பணமும், சொத்தும் இல்லா-விட்டாலும் வெறும்நாணயம்மட்டும் சொத்திற்குள்ள மரியாதையைத் தருகிறது.**
  - ❀ **The Life Divineஇல் 1039ஆம் பக்கத்தில் ஆன்மா ஜடத்தை ஆளும்என பகவான் கூறுவதை வாழ்வில் நாம் காண்பது நாணயத்திற்கு டெப்பாசிட் வருவது.**
  - ❀ **காளிதாசனுக்குக் கவி எதிலிருந்து வந்தது? அவன் ஆடு மேய்த்தவன்.**
  - ❀ **சீனுவாசராமானுஜத்தின் கணிதமேதைக்கு உற்பத்தி ஸ்தானம் எது?**
  - ❀ **நாம் வாழ்வில் கண்டுகொள்ள வேண்டியது, கடைப்பிடிக்க வேண்டியது இது.**
  - ❀ **பொருள், திறமை, ஞானம், சொத்து, ராஜ்யம், பிரபலம், வெற்றி, ஆகியவை நாட்டில் நாம் உழைத்துப் பெறுபவைஎன நாம் நினைப்பது சிறிய உண்மை.**

அவை ஆன்மாவில் அளவுகடந்திருப்பதை அகத்தில் பெற்று, புறத்தில் வெளிப்படுத்த வேண்டும்என்பது பெரிய உண்மை.

நாம் சம்பாதிப்பது ஆயிரக்கணக்கில்என்றால் ஆன்மாவில் புதைந்துள்ளது ஆயிரம் கோடிகள்என்பதை நம் மனம் ஏற்பதே அன்னையை நாம் வாழ்வில் ஏற்பதாகும்.

❀ டெப்பாசிட் சேகரம் செய்ய சட்டம் உண்டு; தகுதியுண்டு. விளம்பரம் ஏராளமாகப் போடவேண்டும். அதன்பின் வீடு வீடாக நாம் சென்று வசூல் செய்யவேண்டும்.

- ✰ தானே வருவது,
- ✰ கேட்காமல் பெறுவது,
- ✰ விளம்பரமில்லாமல் சேகரமாவது,
- ✰ கேட்பதற்குமுன் வருவது எல்லாம் வாழ்விலில்லை.
- ✰ இது அருள்.
- ✰ பேரருள்.
- ✰ இக்குடும்பத்திற்கு இல்லாத அருள், தாயாரின் பக்தியால் வருவது.

தாயார் - ...பாண்டி எல்லையை விட்டுப் போய் மீண்டும் வரும்வரை அவர் ஆன்மா திணறியது (suffocation); அவருக்குத் தாங்கவில்லை:

✡ மீன் தண்ணீரைவிட்டு வெளியே உயிரோடிருக்காது; திணறும்; உயிர்போகும்.

✡ அன்னைபக்தர் வெளிநாடு போனவர், அங்குள்ள அளவுகடந்த சுத்தம், சத்தமேயில்லாத அமைதி, மக்களுடைய ஒழுங்கான நடைமுறை, கண்கவரும் கடைகள், அனைத்தையும் ஆச்சரியமாக



விவரித்தவர், "நம் நாட்டில் உள்ள மனநிம்மதி, வளமான சூழல் அங்கில்லை; வறண்டிருக்கிறது. நம்மால் அங்கு மூச்சுவிட முடியவில்லை"என்றார். பிரியமான குடும்பங்களில் வளர்ந்தவர், உணர்வற்ற, வறண்ட, வசதியுள்ள குடும்பங்களில் வாழ நேர்ந்தால் அப்படி உணர்வார்கள்.

❀ இந்திய மண்ணுக்கு அந்த ஆன்மீகச் செழிப்புண்டு.

❀ அன்னைச் சூழல் அச்செழிப்பை உச்சத்திற்குக் கொண்டுபோகும்.

❀ இந்த மாறுதல் மனிதனுக்குத் தாங்காதுஎன்பதால் தீண்டாமை முதலில் ஏற்பட்டது.

❀ அன்னை இச்சிரமத்தை அறிந்தாலும், ஏற்கிறார். அவர் "நாம் வாழ்வை ஏற்கவேண்டும்"என்றபொழுது, நாம் மற்றவருடன் அவர் போல வாழ்ந்து உறவாடவேண்டும்என்று கூறவில்லை. துறவி மனத்தால் வாழ்வைத் துறந்தார். நாம் மனத்தால் வாழ்வை ஏற்க வேண்டும்என்றார் அன்னை. வாழ்வை விலக்கக்கூடாதுஎன்ற தத்துவத்தை மாற்றி, வாழ்வை நாம் ஏற்கவேண்டும்என்பதை நடைமுறையில் எப்படிப் பின்பற்றுவது?

- ✰ குடும்பத்தைவிட்டு வெளியேறி காட்டுக்குப் போவதில்லை.
- ✰ குடும்பக் கடமைகளைக் குடிமகனாகச் செய்வதற்குப்பதிலாக அன்பராக நிறைவேற்றவேண்டும்.
- ✰ மற்றவர் பொய்யை, இலஞ்சத்தை, தவற்றை ஏற்பதால் நாமும் அவற்றை ஏற்காமல், நாம் மெய்யைமட்டும் ஏற்று அவர்கள் வாழும் வாழ்வை வாழவேண்டும். அப்படி வாழும்பொழுது அன்னையை ஏற்காதவருடன் உள்ள தொடர்பைக் குறைத்து அன்னையை ஏற்றவரை நம் உலகமாக்கிக்கொள்ள வேண்டும். நாம் பின்பற்றும் இலட்சியத்தைக் கைவிடாமல் இருப்பதே முக்கியம். வாழ்வை ஏற்பதுஎனில் வாழ்வின் இலட்சியத்தை ஏற்று இலட்சியமாக வாழ்வதுஎனப் பொருள். நாம் இப்பொழுதும் அப்படியே வாழ்கிறோம் என்பது கவனிக்கத் தக்கது. நாம்

வாழ்விலிருப்பதால் பிச்சைக்காரனைப்போல் பிச்சை எடுப்பதில்லை, திருடனைப்போல் திருடுவதில்லை. சந்திரனுக்குப் போவதுபோல் நாமும் போவதில்லை. பலர் கோடீஸ்வரனாவதுபோல் நாமும் ஆவதில்லை. இன்றைய வாழ்வின் இலட்சியத்தை முடிந்தவரை ஏற்று, மேல்நோக்கிப் போக - கீழ்நோக்கிப் போகக்கூடாதுஎன்று - முடிவுசெய்து வாழ்கிறோம். அன்பரானபின் இலட்சியம் உயர்கிறது. வாழ்வைத் துறப்பதில்லை. நம்மால் முடிந்ததைச் செய்கிறோம். முடியாததை நாம் செய்து நஷ்டப்படுவதில்லை.

தாயார் - ...அறிவில்லாத, அந்தஸ்தில்லாத பெண் தம்மை மெச்ச விரும்பியதால், அறிவும் திறமையுமுள்ள அவர் அறிவில்லாத காரியத்தைச் செய்து அத்தனையையும் இழந்தார்:

✡ துரோகம், எதிர்ப்பை மீறி அன்னை செயல்படுவதுண்டு; அது அன்பர் வாழ்வில் அடிக்கடிக் காணப்படும்; அதை நாம் வலிந்து விரும்பி சட்டமாகப் பின்பற்ற முடியாது; அப்படிச் செய்தால், அவரை விட்டு விலகிய தரித்திரம் நம்மைப் பிடித்துக்கொள்ளும். அவருக்கு நம்மைப் பழிவாங்கும் எண்ணம் எழுந்தால், நம் செயல் அதற்குத் துணை செய்யும். நமக்குள்ள கடமை, திறமை, சந்தர்ப்பம், மனச்சாட்சியை ஒட்டி நாம் செயல்படவேண்டும்.

✡ மேற்சொன்னவர் அவருடைய துரோகத்திற்கு அடியோடு அழிந்திருப்பார். எவருக்குத் துரோகம் செய்தாரோ, அவரே முன்னின்று, இவரை முன்னுக்குக் கொண்டுவந்தார்.

✡ இதிலும் சச்சிதானந்த தத்துவம் உண்டு.



❀ ஒரு மரம் முளைக்க ஒரு விதை ஏற்படுவதில்லை. நூறு விதை அழிந்து ஒன்று முளைக்கிறது. ஒரு விதை முளைக்க இயற்கை ஆயிரம் விதையை உற்பத்தி செய்கிறது.

❀ கவி ஒரு செய்யுள் எழுத ஆயிரம் செய்யுள் அவன் மனத்தில் எழுந்து மறைகிறது. அவை விரயமன்று. ஒன்றை உற்பத்தி செய்யும் பெருமுயற்சி.

❀ போரில் ஒருவன் தலைவனாக ஆயிரம்பேர் இருதரத்திலும் உயிரை விடுகின்றனர்.

❀ ஒரு மலைச்சிகரம் ஏற்பட பெரிய அடிவாரம் வேண்டும்.

❀ மனிதனைப் படைக்கும்முன் இறைவனுக்கு எத்தனையோ ரூபங்கள் அளிக்கப்பட்டன. இறைவன் அவற்றை ஏற்கவில்லை. முடிவாக மனிதனை ஏற்றான்என்பது வழக்கு.

❀ குழந்தை ஒருசொல் பேச முயலும்பொழுது பலமுறை, பலநூறு முறை சொல்லைச் சொல்லிப்பார்க்கிறது. பலஆயிரம் முறை காதால் அச்சொல்லைக் கேட்கிறது.

❀ சிருஷ்டிக்க, தொடர்ந்தமுயற்சி வேண்டும். பலன் முடிவில் வரும். முதல்முயற்சியே பலிக்காது. முதல்மூச்சில் மண்எடுக்க முடியாது என்பது வழக்கு. செய்த முயற்சிகளெல்லாம் பலனைக் கொடுத்தன. எதுவும் வீண் போகாது.

❀ ஒன்றைச் சாதிக்க ஓராயிரம்முறை முயல்வது சிருஷ்டியின் அடிப்படை, இயற்கையின் அடிப்படை, வாழ்வின் அடிப்படை.

  ☆ பலன் தரும்வரைப் பயிலவேண்டும்.

  ☆ ஒருபலன் எழ நெடிய, நீண்டகாலப் பயிற்சி தேவை.

  ☆ பயிற்சி விரயமன்று; பயிற்சியின்முடிவு பலன்.

தாயார் - நம்மனத்தின் உண்மை, ஆழத்தில் உண்மையாய் இருந்தால் – sincerity – தீயசக்திக்கு இடமில்லை:

✡ தீயசக்திஎன்பது முதல்சிருஷ்டியில் 4 அசுரர்கள் உற்பத்தியானது. இறைவன் 4 கடவுள்களை - சத்தியம், ஜோதி, அமரத்துவம், ஆனந்தம் - சிருஷ்டித்தார். அவர்கள் இறைவனுக்கு எதிராக மாறி பொய், இருள், மரணம், துன்பம் ஆகிய தெய்வங்களாயினர். அவருள் பொய், மரணம் ஆகிய இருஅசுரர்கள் இறந்துவிட்டதாக அன்னை கூறுகிறார்.

இவர்கள் நம் உண்மையைச் (sincerity) சோதிக்க இருக்கிறார்கள்என்கிறார் அன்னை.

இந்த 4 அசுரர்கட்கு 4000 சிறுதேவதைகள் உண்டு. அது பொறாமை, தில்லுமுல்லு, ஏமாற்றம்போன்ற குணங்களாக வெளிப்படுகின்றன.

✡ எவர்மூலம் எந்த தீயசக்தி நம்மைத் தாக்கினாலும்,
  - ❀ நம்மிடம் அதற்குரிய குறையில்லாமல் அத்தாக்குதல் நடைபெறாது.
  - ❀ குறைஎன்பது குறையாகமட்டும் இருக்காது. நிறைவுக்குரியவராக இல்லாவிட்டால் வாய்ப்பு வரும்பொழுது அது குறையாகும்.
  - ❀ எல்லா நிலைகட்குரிய நிறைவுகள் உண்டு. அதேபோல் குறைவும் உண்டு.

✡ தீய சக்திகள் இறைவனுக்காகப் பெரிய சேவை செய்கிறார்கள்என அன்னை கூறுகிறார்.
  - ❀ நாம் நாலுபேர்போல் வாழ விரும்புகிறோம்.
  - ❀ ஒருவர் பையன் அமெரிக்கா போனால், நம்பையனும் போக விரும்புகிறோம்.
  - ❀ அதுபோன்ற போட்டியில்லாத இடங்களில் வாழ்க்கை எளியதாய் இருப்பதைக் காண்கிறோம்.
  - ❀ மனிதன் தன்னை அறிந்தவனில்லை.
  - ❀ தன்னை அறிந்தவனுக்கும் ஒருகட்டத்தில் தன்னையறிய முடியாத நிலையுண்டு.



  - ❀ தன்னை அறிய முடியாதவனுக்குத் தன்னை அறிவிப்பது,
    - ✫ சமூகப் போட்டி,
    - ✫ முன்னோடிகள்,
    - ✫ தீயசக்திகள்,
    - ✫ பெற்றோர்,
    - ✫ திருடன்போன்ற குற்றவாளிகள்,
    - ✫ இயற்கையின் அட்டகாசமான புயல், பூகம்பம்,
    - ✫ உடனுள்ளவர்கள்,
    - ✫ கயமை,
    - ✫ தியானம், சித்தி,
    - ✫ மகாபுருஷர்கள்,
    - ✫ சந்தர்ப்பம்.

தாயார் - அன்னையிடம் தவறுபவர்கள் அனைவரும் உயர்ந்தவர்-களே:

✡ உயர்ந்தவரே அன்னையிடம் வருகிறார்கள்.

எவர் அன்னையிடம் வந்தாலும் உயர்ந்தவராகிவிடுவார்கள்.

தாம் உயர்ந்தவர்என்ற எண்ணம் எழுந்தால் தாழ்ந்தவராகி விடுவார்கள். அது அவர்களைத் தவறவைக்கும்.

✡ ஏன் அன்பர்கள் தவறுகிறார்கள்?

திறமை, பக்திபோன்ற ஓர்அம்சமிருப்பதால் அன்னையிடம் வருகிறார்கள். அந்த அம்சம் அளவுகடந்து பெருகுகிறது. அதற்கேற்ப அடுத்த அம்சங்களையும் உயர்த்திக்கொண்டால் தவறு வாராது. இல்லையெனில் imbalance நிலைகொள்ளாது. நிலைகொள்ளாத நேரம் எப்படிப் பழகுவதுஎனத் தெரியாது. தவறு எழும்.

ஒருமாணவன் கணிதத்தில் 100 மார்க் வாங்கி முதல்வனாக வந்தால், தனக்குத் திறமையிருப்பதை அறிந்து மற்ற பாடங்களிலும் அதிகமார்க் வாங்க முனைவது நல்லது. தான் 100மார்க் வாங்கினேன் எனக் கர்வம்கொண்டால் வகுப்பு அவனுக்கு எதிரியாகும். அந்த 100 மார்க் அடுத்த பரீட்சையில் வாராது.

- ❀ மார்க் திறமையால் வருகிறது.
- ❀ பழக்கம் பர்சனாலிட்டியால் வருகிறது.
- ❀ மனிதனை நிர்ணயிப்பது திறமையில்லை, பழக்கம்.
- ❀ ஏன் அன்னை அந்த நிதானத்தையும் தரக்கூடாதுஎன்பது வழக்கமான கேள்வி.
- ❀ பர்சனாலிட்டி அன்னையை ஏற்றால் அன்னை அதையும் தருவார்.
- ❀ 'நாம்'என்பது பர்சனாலிட்டி.
- ❀ போனில் பேசவேண்டும்என்றபொழுது டயல் செய்கிறோம். 'நல்ல பதில் வரவேண்டும்'எனப் பிரார்த்திக்கிறோம்.
- ❀ நாம் பதிலை அன்னைக்குட்படுத்துகிறோம்.
- ❀ பேச வேண்டும்என்று தோன்றியவுடன் தோன்றியதை அன்னைக்குச் சமர்ப்பணம் செய்வது பர்சனாலிட்டியில் அன்னையை ஏற்பதாகும்.
- ❀ அன்னையால் நம்வசதிகள் வளர்ந்தபின், பிறர்மீதும், குறிப்பாக அன்னைமீதும் நமக்குக் கோபம் வருகிறது.

  "என் மீது கோபப்படாதவர் இங்கு எவருமில்லை"என அன்னை கூறியிருக்கிறார்.
- ❀ மனிதர்கள்மீது கோபப்படாமலிருக்கலாம். அன்னைமீது குறை-படாமல், கோபப்படாமலிருக்க Mother's Sincerity வேண்டும்.

தாயார் - நல்ல குணமிருப்பதாலேயே எதிரான குணமிருக்கும்:



✡ இதன் தத்துவத்தை அறிந்தால் விளக்கமாகப் புரியும்.

மனம் பகுக்கும்கருவி. நாம் ஒருபகுதியை வெட்டிஎடுத்தால் மீதி இருக்குமன்றோ!

நாம் மரத்தில் பழம்பறிக்கும்பொழுது, பழம்மட்டும் கண்ணில்படும்; மீதிபடாது.

நம்மனதில் பட்டாலும், படாவிட்டாலும், மீதி மரம் கிளை, இலை, தளிர், துளிர், பூ, மொக்கு அங்குண்டு.

பழம் ஒருபகுதி; மீதி அடுத்தபகுதி.

இவ்விரு பகுதிகளில்லாமல் நாம் செயல்பட முடியாது.

வாழ்வில் இருபகுதிகள் இல்லை. நாம் ஒருபகுதியை முடிவாகக் கருதுவதால் அடுத்தபகுதி ஏற்படுகிறது.

எனவே இருபகுதிகள் - இரட்டை - ஏற்படுகின்றன.

✡ மீண்டும் கூறினால், மனம் ஒன்றான முழுமையை இரு பகுதிகள் ஆக்குகின்றது. அவற்றை எதிரெதிராகக் காண்கிறது.

✡ மனிதனுக்குக் குணம் உண்டு. அது ஒன்றே.

நாம் குணத்தில் நல்லபகுதியைமட்டும் ஏற்கிறோம்.

எனவே மீதி, அடுத்தபகுதியாகிறது.

அடுத்ததை நல்லதன்றுஎன்கிறோம்.

நல்லதன்றுஎன்பது கெட்டதாகிறது.

எனவே நல்லகுணம் ஏற்பட்டால், அங்கு கெட்டகுணமிருக்கும்.

நாம் வாழ்வில் எதிரானவற்றைக் காண்கிறோம்.

✡ அப்படி ஏற்பட்டவை,

| | |
|---|---|
| சத் | - அசத்; |
| ஜீவியம் | - ஜடம்; |
| ஆனந்தம் | - வலி; |
| முழுமை | - பகுதி; |

| | | |
|---|---|---|
| இருள் | - | ஒளி; |
| அறிவு | - | அறியாமை; |
| நல்லது | - | கெட்டது; |
| சத்தியம் | - | பொய்; |
| உயர்வு | - | தாழ்வு; |
| நியாயம் | - | அநியாயம்; |
| வலிமை | - | எளிமை; |
| மௌனம் | - | சப்தம்; |
| திருப்தி | - | ஏமாற்றம்; |
| கூடிவருவது | - | கெட்டுப்போவது; |
| சந்தோஷம் | - | வருத்தம்; |
| குதூகலம், சந்தோஷம் | - | சோகம்; |
| வெற்றி | - | தோல்வி; |
| நிறைவு | - | குறைவு; |
| நினைவு | - | மறதி; |
| சரி | - | தவறு; |

தாயார் - உறவினர் சம்பிரதாயத்தை ஏற்றவர். நாம் சம்பிரதாயத்தை விட்டவர்கள். ஒத்துவாராது. சம்பிரதாயம், பொய், சூது, குடி ஆகியவை நம்மைச் சமமாகப் பாதிக்கும்:

- ✡ சம்பிரதாயம், பொய்யைப்போல் பாதிக்கும்என்பதன் தத்துவம் என்ன?
- ✡ குடியும், சூதும் பாதிக்கும்என்று நாம் அறிவதுபோல் பொய் பாதிக்கும் என நாம் நடைமுறையில் நம்புவதில்லை.
- ✡ பொய் பாதிக்கவில்லையே, நான் நன்றாகத்தானே இருக்கிறேன்என்று நினைக்கிறோம்.



- ✡ இந்தக் குடும்பம் கம்பனி பெற்றதும், அதன்பிறகு power project பெற்றதும், பொய்யை விடாமலிருந்தால் நடந்திருக்காது. அவை வாராவிட்டால் குடும்பம் அவற்றை இழந்ததை அறியாது.
- ✡ மனிதன் unconscious. தான் பெற்றதை அறியான். இழந்ததையும் அறியான்.
- ✡ சம்பிரதாயம்என்பது என்ன? ஏன் அது நம்மைப் பாதிக்கவேண்டும்?
- ✡ மனிதன் vital உணர்வால் வாழும் வாழ்விற்குப் பாதுகாப்புத் தருவது சம்பிரதாயம். ஆத்மாவால் வாழும் மனிதனை அது பாதிக்கும். விசேஷங்களில் மேளதாளம் உண்டு. அது விசேஷங்களை விசேஷமாக்கும். தியானத்தில் மேளவாத்தியம் வைக்க முடியுமா?
- ✡ ஸ்ரீ அரவிந்தம் மனத்திற்கு முழுமை தருகிறது. மனத்திற்கு முழுமையில்லை. முழுமையை இழந்தமனம் உணர்வுக்குக் கட்டுப்பட்டு அஞ்ஞானவாழ்வை வாழும்பொழுது சம்பிரதாயம் வருகிறது. உணர்வைவிட்டு உயர்ந்து, மனத்தை அடைந்து, மனத்தில் முழுமை பெற்றபின் உணர்வுக்குரிய சம்பிரதாயம் பாதிப்பது இயற்கை.
- ✡ அர்த்தமற்றதற்கு அர்த்தம் தருவது சம்பிரதாயம்.
- ✡ அர்த்தமற்றதைத் திருவுருமாற்றத்தால் அர்த்தமுள்ளதாகச் செய்வது ஸ்ரீ அரவிந்தம்.
- ✡ அர்த்தமற்றதை அர்த்தமுள்ளதாக ஏற்பது சம்பிரதாயம்.
- ✡ கல்லை விக்ரஹமாக்கி தெய்வமாக வழிபட நாம் அர்ச்சனைஎன்ற சம்பிரதாயத்தை ஏற்கிறோம். ஒருவருக்கு இறைவன் தியானத்தில் சித்தித்தபின் கோவிலுக்குப்போய் அர்ச்சனை செய்தால், அதன்பிறகு தியானமே வாராது. இறைவன் தரிசனம் கிடைக்காது. தரிசனத்தையும், தியானத்தையும் இழந்தவர் அதை அறியாவிட்டால் அது துர்அதிர்ஷ்டம்.
- ✡ எந்த உயர்ந்த செயலிலும் இறைவன் பங்கு இருக்கும். அதை நாம் பெரும்பாலும் அறிவதில்லை. இறைவன் ஸ்பர்சமில்லாமல் எந்த நல்ல

காரியமும் நிறைவேறாது. எலக்ஷனில், திருமணத்தில், பெருவிழாவில், அவை முடிந்தபிறகு முக்கியஸ்தர்கள் கூடிப் பேசும்பொழுது "நல்ல வேளை கடைசி நேரத்தில் இது நடந்தது. இல்லையென்றால் எல்லாம் கெட்டுப்போயிருக்கும்"என்று கூறுவார்கள். சம்பிரதாயம், அந்த சந்தர்ப்பத்தை அழித்துவிடும்.

- ❀ 1947இல் 1 கோடி அகதிகளை சர்க்கார் சமாளிக்கமுடியாத பொழுது மௌண்ட்பேட்டன் சமாளித்தார்.
- ❀ இரண்டாம் உலகப்போரில் பிரிட்டிஷ் சிப்பாய்கள் சேர்ந்துள்ள இடத்தை ஹிட்லர் பாம் போட முடிவுசெய்தான். அது நடந்து இருந்தால் போரை உலகம் இழந்திருக்கும். மூடுபனி வந்து அதைத் தடுத்துப் போரை வென்றது.
- ❀ IASபோன்ற பெரிய உத்தியோகத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள், "ஏனோ இன்டர்வியூவில் எனக்குத் திடீரென நல்ல பதில்கள் தோன்றின"என்பார்கள்.
- ❀ வரன் முடிந்தபின், "நாங்கள் எதிர்பார்க்கவில்லை. சம்பந்திகள் மனதில் நல்லெண்ணம் தோன்றியதால் விஷயம் முடிந்தது"என்று பேசுவதுண்டு.
- ❀ யோகி இறைவன் ஸ்பர்சத்தை எல்லாச் செயல்களிலும் காண்கிறார், அதனால் அவரால் யோகம் செய்யமுடிகிறது. நாம் ஒரு விஷயத்தி- லாவது அதைக் காணவேண்டும். சம்பிரதாயம் அந்த வாய்ப்பை அழித்துவிடும்.

கணவர் - நீ சொல்வதிலெல்லாம் சமர்ப்பணம் சுலபமாகத் தெரிகிறது;

தாயார் - சுலபம்என்று ஒன்றை நாடினால், பலன் பெரியதாக இருக்காது. சமர்ப்பணம் மிகவும் கடினம்:



- ✡ சுலபமானது வேண்டும்என்ற மனப்பான்மைக்கு எதுவும் கடினம். தோற்றத்திற்குச் சுலபம் உண்மையில் சுலபமன்று.
- ✡ சமர்ப்பணத்தை நன்கு அறிய நாம் பிரம்மத்தை நினைவுபடுத்துவது பயன்தரும்.
  - ❀ ஜடம்முதல் சத்வரை எட்டு நிலைகள். பிரம்மம் அவற்றைக் கடந்தது.
  - ❀ ஜடஉலகில் எளிய காரியங்களே நடைபெறும். 10,000 ஆண்டுகட்குமுன் மனிதன் ஜடமாக வாழ்ந்தான்.
  - ❀ Vital living உயிரால் வாழ்ந்த மனிதனை எகிப்து, இந்தியா, தென்அமெரிக்காவில் 1000 ஆண்டுகட்குமுன் காண்கிறோம்.
  - ❀ ஐரோப்பா, அமெரிக்காவில் விஞ்ஞானம் வகுத்தவாழ்வை மனத்தால் வாழும் மனிதன் வாழ்கிறான்.
  - ❀ ஜடமானநிலையில் மிகக்குறைவாகவும், உயிரான நிலையில் அதிகமாகவும், மனத்தால் வாழும்பொழுது ஏராளமாகவும் மனிதன் சாதித்திருக்கிறான்.
  - ❀ ஜடத்திற்குரிய திடம் வாழ்வுக்கில்லை. வாழ்வுக்குரிய சக்தி மனத்திற்கில்லை.
  - ❀ சக்தி (குணம், ரூபம்) குறையக் குறைய சாதிப்பது அதிகமாகிறது.
  - ❀ சத்தியஜீவியம், ஆனந்தம், ஜீவியம், சத்என்ற நிலைகளை அடையும்பொழுது குணமும், ரூபமும் மேலும் குறைகின்றன. அதனால் அவற்றால் அதிகமாகச் சாதிக்கமுடியும்.
  - ❀ சத்தைக்கடந்து பிரம்மத்தில் போனால் எந்தவிதமான சக்தியோ, குணமோ, ரூபமோ, எதுவுமேயில்லை. எதுவுமேயில்லைஎன்ற காரணத்தால், பிரம்மம் பிரபஞ்சத்தை, எல்லாவற்றையும் சிருஷ்டித்தது.

    *குறையக் குறைய சிருஷ்டிக்கும் திறன் அதிகமாகும்.*
  - ❀ பிரார்த்தனை முதல் கட்டம். அது ஓரளவு சாதிக்கிறது.

❀ மனமாற்றம் அடுத்த கட்டம். அது அதிகமாகச் சாதிக்கிறது.

❀ மேல்மனத்தின் காலம், சிந்தனை அழிந்தால் மேலும் அதிகமாகச் சாதிக்கும்.

❀ பிரார்த்தனையில் கேட்பதைவிட மனமாற்றத்திலும், காலத்தைக் கடப்பதிலும் நாம் குறைவாகக் கேட்பதால், அதிகமாகக் கிடைக்கிறது.

❀ சமர்ப்பணத்தில் எதையும் கேட்பதில்லை. மேலும் அதிகமாகப் பெறுகிறோம்.

❀ சரணாகதியில் கேட்கவேண்டும், கேட்கவேண்டாம்என்ற எண்ணமே அழிவதால் பிரம்மம் சித்திக்கிறது.

❀ அனைத்தையும் பெறுவது சமர்ப்பணம்.

❀ எதையும் கேட்கமுடியாத மனநிலையிருப்பதால் எல்லாம் கிடைக்கிறது.

❀ பலன் பிரம்மாண்டமானதால், செய்வது கடினம்.

❀ அன்னையை முழுமையாக ஏற்றால், அதுவும் கடினமில்லை.

தாயார் - நாம் மனத்தாலான மனிதன்என்றாலும், செயலளவில், நடைமுறையில் உடலால் வாழ்கிறோம். தாகம் எடுத்தால் தண்ணீர் குடிப்பதைப்போல், மேலே ஏதாவது விழுந்தால் உதறுவதுபோல், உடல் செயல்படத் தயாராகக் காத்துள்ளது.

✡ உடல் எந்த நிமிஷமும் தன்னையறியாததுபோல் உஷாராக இருப்பதால் தாகம், உதறுவது, அதை அறியாமல் நடக்கிறது. சமர்ப்பணம் அங்கு ஆரம்பிக்கவேண்டும். உண்மையில் அதையும் கடந்து சமர்ப்பண மையம் உள்ளது.

✡ ஜன்னி வந்த நேரம், மந்திரத்தால் மயக்கம் வந்தபொழுது, சந்தோஷத்தால் பரவசப்பட்டபொழுது, பீதியால் உடல் தன்னைப் பாதுகாக்க முயலும்பொழுது அந்த ஆழத்தைத் தொடுகிறது. அதுவே சமர்ப்பணத்திற்குரிய நிலை.



✡ நாம் மனம், உயிர், உடலைக்கடந்து, அவற்றின் மையமான பிரகிருதியைக் கடந்து, புருஷனையடைந்து, அதையும்கடந்த சைத்தியப் புருஷனில் இருந்தால் சமர்ப்பணம் பலிக்கும்.

❀ அந்நிலை ஒருக்ஷணமாவது இல்லாமல் சமர்ப்பணம் முடியாது.

❀ அந்நிலையில் கடந்தகாலமும், எதிர்காலமும், நிகழ்காலத்திற்குள் வருவதால் நம்சமர்ப்பணம், செயல் - கல்லூரி அட்மிஷனை உதாரணமாகக் கூறலாம் - எதிர்காலத்தில் என்ன செய்யும்எனக் காட்டும். நாம் எந்தவேலைக்குப் படிப்பை முடித்து போகின்றோமோ அந்தஆபீஸ் கண்முன் தெரியும்.

❀ இந்த அட்மிஷனுக்குக் காரணம் உள்ளூர் M.P.என நாம் அறிவோம் என்றால், உண்மையில் அவர் தகப்பனார் நம் பெரியப்பாவின் உதவி பெற்றவரானால், அட்மிஷன் சமர்ப்பணமாகும்பொழுது பெரியப்பா கண்முன் வருவார். அன்று பெரியப்பாவின் உதவி செய்யும் மனப்பான்மை இன்று அவர் மகன்மூலம் நமக்கு அட்மிஷனாக வருகிறதுஎன அக்காட்சி சொல்லும்.

❀ உடலும், உயிரும் அந்நிலையில் உலகோடு ஒன்றியிருப்பதால் நம்முள் தொடர்புகொண்டு, இப்பொழுது நம்செயலால் அட்மிஷன் பெறுபவர் பலர் மனத்தில் நினைவாகவோ, கண்ணில் காட்சி-யாகவோ வருவார்.

❀ அது அகந்தை கரையும்நேரம்என்பதால் உடல் காற்றில் பறப்பது போலிருக்கும்.

❀ நம்மையறியாமல் சொல் நம்வாயால் வரும். அச்சொற்கட்கு அர்த்தம் அப்பொழுது புரியாது. எதிர்காலத்தில் பலிக்கும்பொழுது புரியும். அக்கல்லூரி ஹாஸ்டலில் A13என்ற ரூம் ஹாஸ்டல் செக்ரடரிக்குடையதுஎன்றால், நமக்கு A13 வேண்டும்என வாய் சொல்லும். செக்ரடரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின் அச்சொல்

ஏன் வாயில் வந்ததுஎன விளக்கும். இவை மறந்துபோவதும் உண்டு.

❀ எந்த அளவுக்கு விழிப்புள்ளதோ, அந்த அளவுக்கு எதிர்காலம் தெரியும்.

❀ அவசரம், படபடப்புப்போய் அகண்ட அமைதி எழும்.

கணவர் - பிரம்மம் அற்புதமாகச் சித்திக்கவில்லையா?

✡ பிரம்மம் சத்தாகி - சத் அசத்தாகி - சத் 5 வகைகளாக வெளிப்படுவதில் ஆன்மா ஒன்று. ஆன்மாவின் 12 அம்சங்களில் ஒன்றுமூலமாக ஆன்மாவை அடையலாம். சத் ஆன்மாவைக் கடந்தது. பிரம்மம் சத்தைக்கடந்தது.

✡ 'நாழி முகவாது நானாழி'என்பதுபோல் பிரம்மத்தை எந்தக் கருவியால் நாம் அடைகிறோமோ அதற்கேற்ப பிரம்மம் தன்னை வெளிப்படுத்தும்.

❀ ரிஷிகள் மனத்தால் தவம் செய்தனர். அவர்கள் அக்ஷரப்பிரம்மம் வரை சென்று அதையே பிரம்மம்எனக் கருதினர்.

❀ அக்ஷரப்பிரம்மம், க்ஷரப்பிரம்மம் இரண்டும் பிரம்மத்தின் பகுதிகள்.

❀ அந்த 'முழுமை'யான பிரம்மமே மனத்தால் காண்பதால் முழுபிரம்மமில்லை.

❀ ஏனெனில், அது மௌனப்பிரம்மம். அடுத்த பகுதி சலனப் பிரம்மம்.

❀ இரண்டும் சேர்ந்தது பிரம்மத்தின் முழுமை.

❀ அது மனத்திற்குப் புலப்படாது. சத்தியஜீவியத்திற்குப் புலப்படும்.

❀ அதை உலகில் முதலில் கண்டவர் பகவான் ஸ்ரீ அரவிந்தர். அடுத்தபடியாகக் கண்டு, சித்தித்தவர் அன்னை.

❀ அது பிரம்மம் அற்புதமாக சித்திப்பது.



❀ அது ஒளியைவிட வேகமானது.

❀ அந்த பிரம்மம் புறத்திற்கோ, அகத்திற்கோ உரியதன்று. புறத்தைத் தன்னுட்கொண்ட அகத்திற்குரியது.

❀ அந்த முழுமையான, அற்புதமான பிரம்மம் யுகத்தை க்ஷணமாக்கும்.

❀ அன்னை சிதம்பரம் போனபொழுது காரிலிருந்து இறங்குவதை பலரும் கூடிப் பார்த்தபொழுது, சிலம்பம் கற்றுக்கொண்ட ஒருவரும் அன்னையைக் கண்டார். அவர் ஆத்மா விழிப்பானது. அன்னையை தரிசித்ததில் மேலும் விழிப்புற்றது. அவருடைய எல்லாப் பிள்ளைகளும் அன்பராயினர். அவர் 1973 நவம்பர் 17ஆம் தேதி அன்னை சமாதியடைந்த நாளில் காலமானார். அவர் சைத்தியப்புருஷன் விழிப்பானதால், அவர் பிறர் இனிக்கப் பழகுவார். காப்பிக்கடை நடத்தினார். அவர் கையால் காப்பி சாப்பிட்டவர், வேறு காப்பி சாப்பிடப் பிரியப்படமாட்டார்கள். அவர் கடைக்கு வந்து டிபன் சாப்பிட்டவர், அவரில்லை என்றால், அவர் வரும்வரை காத்திருந்து காப்பியை அவர் கையால் சாப்பிடுவர்.

✰ சைத்தியப்புருஷன் சற்று வெளிப்படுவது காப்பிக்கு ருசி அளிக்கிறது.

✰ சைத்தியப்புருஷன் வெளிப்பட்டால் வாழ்வு இனிக்கும்.

✰ மனிதவாழ்வு சைத்திய ஸ்பர்சத்தால் இனிக்கிறது.

✰ தெய்வீக வாழ்வென்பது பிரம்மமே சைத்தியப்புருஷனாகி வாழ்வாக வெளிப்படுவதாகும்.

✰ கடலினின்று நீர் மேகமாகி மழையாகப் பெய்து வாழ்வை வளமாக்குகிறது. பிரம்மம் கடல். கடல் உப்பு நீரானதால் உபயோகப்படாது. கடலே அமிர்தமாகி பாற்கடலானதாகப் புராணம் கூறுவது நம்வாழ்வில் பலிப்பது தெய்வீக வாழ்வாகும்.

கணவர் - சப்தம் உள்ளிருந்து எழவேண்டும். உள்ளிருந்து ஒரு கதிர் எழுந்து உலகில் உலவி அனைவரையும், இந்தக் கருவிகள் - தொடுவது, மணியடிப்பது - இல்லாமல் தொட வேண்டும்:

- ✡ தொடுவதால் பரவுவது உணர்வு (vital sensation). பிரம்மத்தின் கதிர்கள் கருவியில்லாமல் பரவும். கருவிமூலம் பரவும் பிரம்மத்தின் கதிர்கள் பிரம்மம் உணர்வில் வெளிப்படும் கதிர்களாகும்.
- ✡ பிராணயாமம் செய்பவர்கள்உடல் சக்தியால் நிரம்பியிருக்கும். அவர்கள் கைபட்டால் பிறர்வியாதி குணமாகும். அது உணர்வின் சக்தி. பிரம்மம் சித்தித்தவர் பார்வைக்கு தீட்சை தரும் தகுதியுண்டு.
- ✡ பூரணயோகத்தில் தீட்சைஎன்ற ஒரு சாங்கியமில்லை.
- ✡ பூரணயோகத்தில் சித்திப்பது முழுப்பிரம்மம்.
- ✡ அது சாங்கியங்களைக் கடந்தது.
- ✡ அன்னையின் பார்வை தீட்சையாகும்.
- ✡ பிரம்மரிஷியின் வாக்கு, பார்வை சக்திவாய்ந்ததானாலும், அது முழுப்பிரம்மமில்லைஎன்பதால், தீட்சைக்கு மந்திரம், சாங்கியம் உண்டு.
- ✡ முழுப்பிரம்மம்என்பது மூன்றாம்நிலை காலத்திற்குரியது, பிரம்ம ஜனனத்திற்குரியது. அது எங்கும், எந்நேரமும் தவழ்வது. அதற்குச் சூழலே போதும். பார்வை தீட்சையாகும்.
- ✡ IAS ஆபீசர்கட்கு 18 மாதப் பயிற்சியுண்டு.
- ✡ எந்த நிர்வாக அனுபவமுமற்ற அரசியல்வாதி மந்திரியானாலும், பயிற்சி தருவதில்லை.
- ✡ அரசியல், நிர்வாகத்தைக்கடந்த நிலையில் உள்ளது. அரசியலுக்குள்ள முழுமை, நிர்வாகத்திற்கில்லை.
- ✡ அம்முழுமை புறத்திலில்லைஎன்பதால் ஒலி, சொல் தேவையில்லை.



- ✡ அது அகத்திற்குரியதுஎன்பதால், சப்தம் உள்ளிருந்து எழவேண்டும்.
- ✡ பகவான் ஸ்ரீ அரவிந்தர், "உலக சக்திகள் என் எண்ணங்களைப் பூர்த்தி செய்துள்ளன. சீக்கிரமாக இல்லாவிட்டாலும், அவை பூர்த்தி அடைந்துள்ளன"எனக் கூறுகிறார்.
  - ❀ இந்திய விடுதலை, ஆசிய விடுதலை அவருடைய இரு இலட்சியங்கள்.
  - ❀ 'ஐரோப்பியநாடுகள் இணையும்'என்று பகவான் கூறியது 60 ஆண்டுகட்குப்பின் நிறைவேறிற்று.
  - ❀ பாகிஸ்தான் 25 ஆண்டுகளில் உடையும்என பகவான் கூறியபடி பங்களாதேஷ் 25ஆம் ஆண்டு பாகிஸ்தானிலிருந்து பிரிந்தது.
  - ❀ லியனார்டோவாக ஸ்ரீ அரவிந்தர் அவதரித்து எழுதியவை ஸ்ரீ அரவிந்தர் பிறந்தபின் பூர்த்தியாயின.
  - ❀ 1930இல் அன்னை, நேரு இந்நாட்டிற்குத் தலைவராவார் என்றதும் நிறைவேறியது. கருவியின்றி பூர்த்தியாகும் கருத்து ஸ்ரீ அரவிந்தம்.

அனைவரும் நடப்பனவற்றையெல்லாம் கூர்ந்து கவனித்து அன்னை கோணத்தில் புரிந்துகொள்ள முயன்றனர்:

- ✡ கூர்ந்து கவனித்தால் உலகமே புரியும். உள்ளே போனால் பிரபஞ்சமும் புரியும். அத்துடன் எதுவும் செய்ய தைரியம் வாராது.
- ✡ உடல் நலமாக இருக்கும்வரை சரி. ஏதாவது வியாதி வந்தால் மருந்து சாப்பிடுகிறோம், சரியாகிறது. டாக்டருடனிருந்தாலும், மெடிகல் கல்லூரியில் படித்தாலும், கிருமிகள், வைரஸ், தொத்துவியாதி, வரக் கூடிய வியாதிகள், கான்சர் எப்படியெல்லாம் வரும்என அறிந்தால் பீதி எழும். எதையும் சாப்பிட தைரியமிருக்காது. இந்தக் கலவரத்தால் பல வியாதிகள் வரும்.

✡ நமது நம்பிக்கை மூடநம்பிக்கை. எதுவும் தெரியாமலிருப்பதால் வரும் தைரியம்; எல்லாம் தெரிந்தால் பயம் வரும். எல்லாம் தெரிந்தபின், எதுவும் தெரியாதபொழுதுள்ள தைரியம் வருவது அன்னைமீதுள்ள நம்பிக்கை. அது நமக்கில்லை.

அனைத்தையும் அறிந்து, அன்னை அதற்கும்மேலானவர்என அறிவது அன்னைமீதுள்ள நம்பிக்கை.

✡ கணவர் கம்பனிப் பணத்தைக் கணக்கில் காட்டாமல் செலவு செய்யலாம்என நினைத்ததும், பணம் அதிகமாக வரும்பொழுது அம்மாவிடமிருந்து தெரியாமல் பணம் எடுத்துப்போகலாம்என சிறியவன் நினைத்ததும், எதிரொலித்து அவனைப் போலீஸ் சந்தேகப்பட்டதால், எந்த அளவு மனம் தூய்மையாக இருக்கவேண்டும் என நாம் அறிகிறோம்.

✡ இதற்கு நேர் எதிராக,

- ❀ திருடுவதே இலட்சியமாகக்கொண்ட அரசியல்வாதிகளுக்குத் திறமையால் பெருஞ்செல்வம் சேர்வதையும்,
- ❀ முதலாளியை சாமர்த்தியமாக ஏமாற்றி இலட்சக்கணக்காகத் திருடிய கணக்குப்பிள்ளைக்கு மகசூல் சாமர்த்தியத்தால் நெம்பர் 1ஆகக் கூடிவருவதும், பிள்ளைகள் பெரிய பட்டம் எடுப்பதும், பெருஞ்சொத்து சேர்வதும் காண்கிறோம். அத்துடன் தீராத வியாதி, அகால மரணத்தையும் தருகிறது.
- ❀ அன்னை உத்தரவை நேரடியாக மீறியவர் செய்த காரியம் நாடெங்கும் பிரபலமாகிறது, அவர் வாழ்வில் துக்கம் வருவதும் காண்கிறோம்.
- ❀ எதை ஏற்பது, எப்படிப் புரிந்துகொள்வது?
- ❀ திறமைக்கும், உழைப்புக்கும் துரோகத்தைமீறி ஜெயிக்கும் திறனுண்டு. எந்த அளவு திறமையும் துரோகத்திற்கு ஈடுசெய்ய முடியாது.



✡ நடப்பனவற்றைக் காண்பவர் நல்லதைத் தேர்ந்தெடுப்பார்எனக் கூறமுடியாது.

✡ காரியம் கூடிவருவதால் மனம் சுத்தம்எனக் கூற முடியாது.

✡ காரியம் கூடிவாராமல் மனம் செயலில் சுத்தமாக இருக்கமுடியாது.

✡ காரியம் கூடிவரவேண்டும், மனம் செயலில் சுத்தமாக இருக்கவேண்டும் என்பது அதிகபட்சமில்லை, அன்பருக்குக் குறைந்தபட்சமாகும்.

*தொடரும்.....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தர்க்கமும், குதர்க்கமும் மனிதனுக்கு இன்றியமையாதவை. இடைவிடாமல் தன்னை அடுத்தவருடன் ஒப்பிட்டுப்பார்ப்பது அவன் உணர்வுக்குரிய பழக்கம். அதனால் அவனால் அவர்களுடைய நிலையைவிட உயரமுடிவதில்லை. உடலால் வாழ்பவன் எதையாவது செய்தபடிஇருக்கிறான். மனமும், உணர்வும், உடலும் இதுபோல் தங்கள் வாழ்வைக் காப்பாற்றிக் கொள்கின்றன.

***ஒப்பிட்டுப்பார்த்தால் உயரமுடியாது.***

**To see sincere people is not tiring.**

**உண்மையானவர்களைப் பார்ப்பது களைப்பு தருவதில்லை.**

- ✡ அன்னையைக் காண்பதை தரிசனம்என்கிறோம்.
- ✡ காலையில், பால்கனியில் தரிசனம் தருவதைத்தவிர அன்னையை அந்த நாட்களில் சாதகர்கள் மாலையிலும் மைதானத்தில் காண்பதுண்டு.
- ✡ புதன், சனியன்று மைதானத்தில் குழந்தைகளுடன் பேசும் பழக்கம் அன்னைக்குண்டு. அப்பொழுது சாதகர்கள் அன்னையைத் தரிசிப்பார்கள்.
- ✡ சாதகர்கள் பிறந்தநாளன்று அன்னை அவர்களைத் தம் அறையில் சந்தித்துத் தரிசனம் தருவார்கள்.
- ✡ அதுதவிர முக்கியஸ்தர்கள்என்று பலரை அன்னை தினமும் காண்பது உண்டு.

  அவர்கள் பல்வேறு வகைகளில் ஆசிரமத்திற்கு உதவும் ஆபீசர்கள், அன்பர்கள், ஆகியோர்.
- ✡ அன்னை ஒருவரைச் சந்தித்தால், அன்னைக்கும் மற்றவர்க்கும் energy level அதிகமாக வித்தியாசப்படுவதால், அன்னை energyயை இழந்து களைத்துவிடுவார். அன்பர்கள் அன்னையை அறியாதவர் வீடுகட்குப் போய்வந்தால் உடல் களைத்துப்போவதைக் காணலாம். அன்னையைத் தரிசிக்கும் அன்பருக்குப் புதிய தெம்பு வருகிறது. அதேபோல் அன்னை தெம்பை இழந்துவிடுகிறார். ஒரு நாளில் சுமார் 100 பேர்முதல் 200 பேர்வரைக்கும் அன்னை தரிசனம் தருவதுண்டு. அப்பொழுதெல்லாம் அன்னை அதுபோல் சிரமப்படுவார்.
- ✡ அன்பர் உடலில் வியாதியிருந்தால், அது அன்னைக்கு வந்துவிடும்.



- ✡ தரிசனத்திற்கு முன்கூட்டி அனுமதி பெறவேண்டும்என்று இக்காரணத்தால் அன்னை ஏற்பாடு செய்தார். முதல் தேதியன்று அன்னையிடம் அனுமதிகேட்கும் கார்டுகள் பலர்மூலம் வரும். அம்மாதம் யார், யாரைத் தாம் அனுமதிக்கிறாரோ, அவர் கார்டில் தேதியும், நேரமும் குறித்து அன்னை அனுப்புவார். ஒரு மார்ச் மாதம் முதல் தேதி 10 கார்டுகள் அப்படி அன்னைக்குப் போயிற்று. அன்னை கார்ட் கொண்டுவந்தவர் கையிலிருக்கும்பொழுதே அவற்றைத் தள்ளிக்கொண்டேவந்து 25ஆம் தேதி கார்டை எடுத்து அனுமதி தந்தார். அந்த அன்பர் அன்னையை முதல்முறையாகத் தரிசிக்கப் போகிறார். முதல் தேதிக்குமுன் 3 நாட்கள் அவர் இடைவிடாது 'மதர்'என்று அழைத்துக்கொண்டிருந்தார். அது அன்னைக்குக் கேட்டிருக்கிறது.
- ✡ அன்பர் எவரானாலும் sincerity உண்மையானவரானால், அவருக்குத் தரிசனம் தருவது அன்னைக்குக் களைப்புத் தாராதுஎன்கிறார்.
- ✡ Sincerity ஆன்மீகத் தெம்பு தருவது.
- ✡ Sincerityஎன்பது உண்மை. அன்னைக்கு உண்மையாக இருப்பதை நாம் Sincerityஎன்கிறோம்.
- ✡ சமூகத்தில் உயர்ந்தவரானாலும், அன்னைமீது நம்பிக்கையற்றவரை அன்னை சந்தித்தால், அவருடல் துவண்டுவிடும்என்பது அன்னை அன்றாடம் அனுபவித்தது.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒரு மனிதனோ, ஒரு விஷயமோ பலன் தரவேண்டுமானாலும், ஆன்மீக ஆசி வழங்கவேண்டுமானாலும் அதற்குரிய போற்றும் மனநிலை அவரிடமோ, அப்பொருளிடமோ இருக்க வேண்டும்.

*போற்றிப் பாராட்டினால் பலன் தரும்.*

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XIV. The Supermind As Creator

We need to give an account of this consciousness. Page No.123 Para No.3
It must be given to the human mind.
For that there should be a relation between them.
Otherwise it is impossible.
It must have some identity with the mental being.
It must have some relation with the mind.
Its nature may be a vision.
It may be a vision of knowledge.
It may not be a dynamic power of knowledge.
Then the results will be different.
We could hope for an illumination.
It may not be a greater light and power.
They will work for the world.
This consciousness is a creatrix of the world.
Therefore it won't be a mere knowledge.
It will also be a power of knowledge.
It is not only a Will to light and vision.
It will be a Will to power and works.



## 14. சத்தியஜீவியம் - சிருஷ்டிகர்த்தா

இந்த ஜீவியத்தை நாம் விவரிக்கவேண்டும்.

மனத்திற்குப் புரியுமாறு சொல்லவேண்டும்.
அதற்கு இவற்றிடையே தொடர்பு தேவை.
தொடர்பு இல்லாவிட்டால் விவரிக்கமுடியாது.
மனத்துடன் அதற்கு ஏதாவது தொடர்பு தேவை.
மனத்தின் ஜீவனுடன் தொடர்புவேண்டும்.
அது காட்சியாக இருக்கலாம்.
அது ஞானத்தின் திருஷ்டியாக இருக்கலாம்.
அது செயல்திறனுள்ள ஞானமாக இருக்கலாம்.
அப்படியானால் பலன் வேறு.
அது ஞானோதயமாக இருக்கும்.
அது பெரிய ஜோதியாகவோ, சக்தியாகவோ இல்லாமலிருக்கலாம்.
அவை உலகுக்காகச் செயல்படும்.
இந்த ஜீவியம் உலகை சிருஷ்டித்தது.
எனவே இது வெறும் ஞானமாக இருக்காது.
அது ஞானத்தின் திறனாகவுமிருக்கும்.
ஞானத்தின் திறனாகவோ, காட்சியின் திறனாகவோமட்டும் அது இருக்காது.
அது செயலின் திறனாகவும், சக்தியின் திறனாகவுமிருக்கும்.

**Mind too is created out of it.**
**Mind must have developed out of it.**
**It must be a development by limitation.**
**Therefore mind may resolve back into it.**
**It may be through a reverse development.**
**It is a development by expansion.**
**Mind is contrary to Supermind in operation.**
**They are settled modes of operation.**
**Mind must be identical with the Supermind.**
**It is identical in essence.**
**The potentiality of mind is concealed in Supermind.**
**It is so in spite of the differences.**
**Mind becomes contrary to Supermind in actual forms.**
**Therefore there may be some methods of comparison.**
**There may be other methods of contrast.**
**It could be in terms of our intellectual knowledge.**
**It may give some idea of Supermind.**
**That idea may be from our point of view.**
**So, it may be rational to try these methods.**
**It may be also profitable.**
**The idea may be inadequate.**
**The terms may be insufficient.**
**Still, it may be a finger of light.**
**It can point onward.**
**It may lead us to some distance at least.**
**We may hope to tread that way.**
**It is possible for mind to go beyond itself.**
**It can do so to certain heights.**
**It is another plane of consciousness.**
**It may receive a higher power.**
**It may be a modified power.**



**மனமும் அதனுள்ளிருந்து உற்பத்தியானது.**
**மனம் அதன் உள்ளிருந்து எழுந்தது.**
**வரையறையால் அது வளர்ந்தது.**
**எனவே மனம் அதை மீண்டும் அடையமுடியும்.**
**அவ்வழி வந்த வழியாகப் போவதாகும்.**
**அவ்வழி விரிவடையும் வழியாகும்.**
**செயல்படுவதில் சத்தியஜீவியம் மனத்தைவிட உயர்ந்தது, எதிரானது.**
**மனம் செயல்படுவதில் முடிவான வகையுண்டு.**
**மனமும், சத்தியஜீவியமும் இரண்டறக்கலந்தவையாக இருக்கவேண்டும்.**
**இரண்டிற்கும் சாரம் ஒன்று.**
**மனம் சத்தியஜீவியத்தினுள் புதைந்துள்ளது.**
**மாறுபாடிருப்பினும் இது உண்மை.**
**உருவம் பெறும்பொழுது மனம் சத்தியஜீவியத்தின்று மாறுபட்டது.**
**எனவே ஒற்றுமையான அம்சங்களிருக்கவேண்டும்.**
**வேறுபடுத்திப் பார்க்கும் வேறு வழிகளிருக்கலாம்.**
**அவை நம் அறிவுக்குரியவையாக இருக்கலாம்.**
**அதிலிருந்து நாம் சத்தியஜீவியத்தை அறியலாம்.**
**அது நம் கண்ணோட்டத்திற்குரியதாக இருக்கலாம்.**
**அம்முறைகளைக் கடைப்பிடிப்பது சரியாக இருக்கலாம்.**
**அது பலன் தரலாம்.**
**இந்த எண்ணம் போதாதுஎனவுமிருக்கலாம்.**
**இக்கொள்கைகள் பற்றாக்குறையானதாக இருக்கலாம்.**
**இருந்தாலும் இது சுட்டிக்காட்ட உதவலாம்.**
**இது வழிகாட்டலாம்.**
**ஓரளவு நம்மை இது வழிநடத்திச்செல்லலாம்.**
**இவ்வழி போக நாம் முயலலாம்.**
**மனம் தன்னைக் கடக்க முடியலாம்.**
**ஓரளவு அதை மனம் சாதிக்கலாம்.**
**அது அடுத்தகட்ட ஜீவியம்.**
**அதன் உயர்ந்த சக்தியை நாம் காணலாம்.**
**அது சற்று மாறுபட்டிருக்கலாம்.**

They may be of the supramental plane.
We can know by illumination.
Or, we may know by intuition.
It may be a direct contact.
It may even be an experience.
To live in it is a victory.
To act in it is also a victory.
Still, it is not humanly possible.

At first let us pause a moment. Page No.124
Let us ask whether there is any light from the past. Para No.4
Can we find that light?
This is an ill-explored domain.
Can that light guide us?
We need a name.
We need a starting point.
This is a state of consciousness.
We have called it Supermind.
The word is not precise.
It may be mistaken.
It may be taken for a super-eminent mind.
A mind above the ordinary mentality.
But not radically changed.
Or, it can be contrary.
It may note what is beyond mind.
Therefore it may assume something too vast.
It may mean the ineffable itself.
We need a subsidiary description.
It should be more accurate.
It must limit its significance.



அது சத்தியஜீவியமாக இருக்கலாம்.
நாம் அதை ஜோதியால் அறியலாம்.
நாம் அதை ஞானத்தால் அறியலாம்.
நேரடித் தொடர்பாலும் அறியலாம்.
அது ஆத்மானுபவமாகவுமிருக்கலாம்.
அங்கு வாழ்வது வெற்றி.
அங்கு செயல்படுவது வெற்றி.
இதுவரை அது மனிதனால் முடிந்ததில்லை.

சற்று நிதானிப்போம்.
கடந்தகால ஞானம் ஏதேனும் உண்டாஎன யோசிப்போம்.
ஏதேனும் ஜோதி வழிகாட்டுமா?
இதுவரை எவரும் கண்டறியாத லோகம் இது.
பழையஞானம் வழிகாட்டுமா?
இதற்கு ஒரு பெயர் தேவை.
நாம் ஆரம்பிக்க ஓர் இடம் குறிப்பிடவேண்டும்.
இது ஒரு ஜீவியம்.
இதை சத்தியஜீவியம்என நாம் அழைத்தோம்.
இது தெளிவற்ற சொல்.
இதைத் தவறாகப் புரிந்துகொள்ளலாம்.
மிகஉயர்ந்த மனம்எனக் கொள்ளும் வாய்ப்புண்டு.
மனிதமனத்தைவிட உயர்ந்ததுஎன நினைக்கும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.
அடிப்படை மாறுதலில்லாததாகக் கொள்ளலாம்.
எதிராகவுமிருக்கும்.
மனத்தைக்கடந்ததை அது கண்ணுறும்.
மிகப்பரந்த ஜீவியமாக நினைத்துவிடலாம்.
சொல்லைக்கடந்த நிலையாகக் கருதிவிடலாம்.
அதன் பகுதியானதைக் குறிக்கும் சொல் தேவை.
மிகத்தெளிவாகச் சுட்டிக்காட்டுவது அவசியம்.
வரையறையிட்டுத் தெளிவுபடுத்தவேண்டும்.

**Page No.124**
**Para No.5**

The Vedic verses are cryptic.
There is a help for us about this.
The Supermind is divine.
It is immortal.
We find its gospel there.
The Vedas contain it.
It is concealed in its expression.
There is a veil on it.
Some flashes come through the veil.
They are illuminating.
It is described as a vastness.
Our consciousness is ordinary.
Its firmaments are limited.
The Supermind is vaster than that.
There is the truth of being.
It expresses itself.
That truth and that expression are one.
They join luminously.
There is a truth of vision.
It is inevitable.
It assures its inevitability.
That truth is formulated.
It has an arrangement.
Its word and act are defined.
There is a result of movement.
There is a result of action and expression.
It is an infallible law or ordinance.
The Vedas describe Supermind.
It has some essential terms.
Vast all-comprehensiveness is one.
Luminous truth is another.
Harmony of being in that vastness is a third.



வேதம் மறைபொருளானது.
நாம் தேடுவதை அங்குக் காணலாம்.
சத்தியஜீவியம் தெய்வீகமானது.
அது அழிவில்லாதது.
அதன் தாரக மந்திரத்தை இங்குக் காணலாம்.
அது வேதத்திலுள்ளது.
சொல்வதை வேதம் மறைத்துச் சொல்கிறது.
வேதத்தின்மீது திரையொன்றுளது.
திரையைமீறிச் சில பொறிகள் வெளிவருகின்றன.
அவை பிரகாசமானவை.
சத்தியஜீவியம் பரந்தவெளியாகக் கூறப்படுகிறது.
நம் ஜீவியம் சாதாரணமானது.
அதன் வானவெளி வரம்புக்குட்பட்டது.
சத்தியஜீவியம் அதைக்கடந்தது.
ஜீவனில் சத்தியம் உண்டு.
அது தன்னை வெளிப்படுத்திக்கொள்கிறது.
சத்தியமும், அதன் வெளிப்பாடும் ஒன்றே.
அவை ஜோதிமயமாகச் சந்திக்கின்றன.
திருஷ்டிக்குச் சத்தியம் உண்டு.
அது தவிர்க்கமுடியாதது.
தவிர்க்கமுடியாதுஎன உறுதி கூறுகிறது.
அந்த சத்தியம் உருவகப்படுத்தப்பட்டது.
அது ஓர் ஏற்பாடு.
அதன் சொல்லும், செயலும் விளக்கப்பட்டுள்ளன.
சலனத்திற்குப் பலன் உண்டு.
பலனும் வெளிப்பாடும் உண்டு.
அது தவறாத சட்டம். அவசரச் சட்டம்.
வேதம் சத்தியஜீவியத்தை விளக்குகிறது.
அதற்குச் சில முக்கிய அம்சங்களுண்டு.
பரந்து விரியும் ஞானம் ஒன்று.
ஜோதிமயமான சத்தியம் அடுத்தது.
அப்பரவெளியில் சுமுகம் அடுத்தது.

**It is not a vague chaos.**
**Nor is it a self-lost obscuirty.**
**That harmonious truth of being is expressive.**
**Truth of law and act too express it.**
**Knowledge offers its own expression.**
**These are the essential terms.**
**The Gods are of Supermind.**
**It is their highest secret entity.**
**They carry the powers of this Supermind.**
**They are born of it.**
**They are seated in it.**
**Supermind is their proper home.**
**Their knowledge is 'truth-conscious'.**
**Their action carries the 'seer-will'.**
**Their conscious-force is turned towards works.**
**It is also turned towards creation.**
**It has a direct knowledge.**
**It is guided by it.**
**It is a knowledge of the works.**
**It is the essence and the law.**
**It is a knowledge that determines.**
**It determines a will-power.**
**It is wholly effective.**
**It does not deviate.**
**Nor does it falter in its process or its result.**
**It expresses in the act.**
**It has seen the act in its vision.**
**It fulfils spontaneously.**
**It is inevitable.**
**Light is here one with Force.**
**Light is a vibration of knowledge.**
**Its rhythm is that of the will.**



**ஏதோ குழறுபடியான குழப்பமன்று.**
**தன்னை இழந்த இருளன்று.**
**சுமுகமான ஜீவனின் சத்தியம் எடுத்துக் கூறவல்லது.**
**சட்டத்தின் உண்மையும், செயலும் எடுத்துக் கூறுகின்றன.**
**ஞானம் தானும் வெளிப்படுத்தும்.**
**இவை முக்கிய அம்சங்கள்.**
**தெய்வங்கள் சத்தியஜீவியத்திற்குரியவை.**
**அது அவர்களது பெரியஇரகஸ்யம்.**
**சத்தியஜீவிய சக்தி அவர்கட்குண்டு.**
**அதிலிருந்து அவர்கள் பிறந்தவர்கள்.**
**அங்கே அவர்கள் வீற்றிருக்கிறார்கள்.**
**சத்தியஜீவியம் அவர்கள் பிறந்த இடம்.**
**அவர்கள் ஞானம் 'சத்திய-ஜீவியம்'.**
**அவர்கள் செயலுக்கு 'திருஷ்டியின்-திறன்' உண்டு.**
**சித்-சக்தி வேலையை எடுத்துக்கொள்கிறது.**
**அது சிருஷ்டியை நோக்கிப்போகிறது.**
**அதன் ஞானம் நேரடி ஞானம்.**
**சத்தியஜீவியம் அவர்களை வழிநடத்துகிறது.**
**ஞானம் செயலைப்பற்றியது.**
**ஞானம் அதன் சாரம், சட்டம்.**
**அது நிர்ணயிக்கும் ஞானம்.**
**செயல்திறனை நிர்ணயிக்கும் ஞானம் அது.**
**அது முழுத்திறன் பெற்றது.**
**அது வழுவாது.**
**வழியிலோ, பலனிலோ அது வழுவாது.**
**அது செயலில் வெளிப்படும்.**
**செயலைத் தன் திருஷ்டியில் அது கண்டுள்ளது.**
**உடனே பூர்த்தியாகும்.**
**அது தவிர்க்கமுடியாதது.**
**ஞானமும், திறனும் இதில் இணைந்துள்ளன.**
**ஜோதி ஞானத்தின் சுடர்.**
**அதன் அசைவு திறனுடையது.**

**Both are one.**
**It is so perfectly.**
**It does not seek.**
**It does not grope.**
**It takes no effort.**
**Its result is assured.**
**The divine Nature has a double power.**
**It is a spontaneous self-formulation.**
**It is a self-arrangement.**
**It wells naturally out of its essence.**
**It is the essence of manifestation.**
**It expresses its original truth.**
**It is a self-force of light.**
**It is inherent in the thing itself.**
**It is the source of its spontaneous and inevitable self-arrangement.**

*Contd...*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

(Physical organisation) வாழ்வின் அமைப்பு மனிதனுடைய மையம். மௌனமான ஆழ்மனதின் செயல், உயிரைக் காப்பாற்றக்கூடியது அல்லது வாழ்வுள்ள நிலையில் அனுபவிப்பது. கலையுணர்வும், அறிவின் ஆராய்ச்சியும்கூட அதனால் ஒதுக்கப்படுகிறது. தன் போக்கை (occupation) அனுபவிக்க மனிதன் ஒதுக்கிய செயல்கள் திடீரென முளைத்துக் குறுக்கிட்டு, அவனுடைய முக்கியவேலையில் எழும். இதுபோல் பேரிலக்கியமும் எழுவதுண்டு.

***விரும்பி ஒதுக்கிய சக்தி திரும்பவந்து பேரிலக்கியம் எழுதியதுண்டு.***



**இரண்டும் ஒன்றே.**
**அவை சிறப்பாக இணைகின்றன.**
**அது நாடுவதில்லை.**
**அது தடுமாறுவதில்லை.**
**அது முயல்வதில்லை.**
**அதன் பலன் நிச்சயம்.**
**தெய்வீகச் சுபாவத்திற்கு இருவகையான சக்தியுண்டு.**
**தானே தன்னை அமைத்துக்கொள்ளவல்லது.**
**அது சொந்த ஏற்பாடு.**
**அதன் சாரத்திலிருந்து இயல்பாக அது எழுகிறது.**
**அது சிருஷ்டியின் சாரம்.**
**ஆதியின் சத்தியம் அதன் வெளிப்பாடு.**
**அது ஜோதியின் சுயசக்தி.**
**அது பொருள்களில் பொதிந்துள்ளது.**
**இயல்பாக, தவிர்க்கமுடியாதபடி சுயஏற்பாட்டின் உற்பத்தி ஸ்தானம் அது.**

*தொடரும்...*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

வாய்ப்புகளை உற்பத்திசெய்வது நம் நோக்கம். எதை நாம் நாடுகிறோம்என்பது எந்த வாய்ப்பை உற்பத்திசெய்கிறோம் என்பதை நிர்ணயிக்கும். கடந்த இருபது ஆண்டுகளாக நாம் அதிக வசதியை அனுபவிக்க முடிவுசெய்துவிட்டோம். எதிர்காலம் அதிகவசதியை அளிக்கப்போகிறது. எனவே எதிர்காலம் அதிகவாய்ப்புகளை உற்பத்திசெய்யும்என்பது திண்ணம்.

***ஆசையின்றித் தேடும் அதிகவசதி***
***நமக்கும், நாட்டுக்கும் வளம் தரும்.***

# PROBLEM SOLVING BY THE SPIRIT

Problems arise and many are solved. Some are not. They are solved by skill, experience, another's help, thoughtfulness, resourcefulness, money, diligence, status, power, prayer and a host of other methods known to the society and available to us. Solving the problem is important. We do not insist that we must solve it ourselves. When it is solved by one of the above means, our hearts hunger to have it solved by our own efforts. It is a good aspiration that develops Individuality. **To aspire to solve it by the invocation of the Spirit develops Spirituality.** Solve it we must. Let us do so by the benevolence of the Spirit. That way we grow in Spirit.

Each of the above methods employs its own strategy. Thoughtfulness thinks. Prayer concentrates. Status moves others. Invocation of the Spirit silently evokes. **Essentially the method of invoking the Spirit means, mind consents to refer the issue to the Spirit**.

It is the experience of most who have sometimes evoked the Spirit successfully that, when a problem arises, the Spirit never comes to the mind. They are unrelated to their inner Spirit. To remember the Spirit when a problem presents is progress for them.

The Spirit acts widely. Your target is fulfilled many times over. It is achieved pleasantly and effortlessly. **Absence of labour or effort is one characteristic of the Spirit.** When the Spirit is in action, a work of years comes to fruition in months, rarely even in days. Spirit moving into action, apart from acting swiftly, raises your status and achieves by the new status. It always accomplishes more than intended. Solving a problem through the Spirit has many extra advantages. **Seeking the Spirit for any of those advantages is NOT seeking it, but the advantages**.

When a work is completed by our own efforts, we should think that it is better to have it done by the Spirit. We can do so the next time or try to re-do the same work inwardly by referring the accomplished result to the Spirit. Solving the problem is essential. Solving the same by the Spirit is the best course open to us. **A problem suddenly transforms itself into an opportunity when the Spirit comes in.** One who faced a warrant tried to reach the Chief Minister to escape arrest. The CM liked him so much that they became fast friends.

— *Courtesy:* **New Indian Express**

❀❀❀

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

# குறைஎன்பது தடையில்லை

குறைஎன இருந்தால், அது எப்படியும் ஏதாவது ஓர் அளவில் பாதிக்கும்.

குறை குறைதானே.

✡ **அன்னையை நாம் சரிவரப் புரிந்துகொள்வதில்லைஎன்றால் என்னஎனப் புரியவில்லை.**

✡ **குறைஎன்பதில் அன்னை எப்படிச் செயல்படுவார்? நாம் அவரை எப்படிப் புரிந்துகொள்ளவேண்டும்?**

✡ **நம் குறை அன்னைக்குத் தடையில்லை. அதைமீறி அன்னை செயல்படுவார்என நாம் அறியவேண்டும்.**

✡ **தாழ்ந்து பிறந்தவனுக்குப் பிறப்புத் தடை. அவன் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆனால், சர்க்கார் அதிகாரம் அவன் குறையை மீறிச் செயல்படும். அன்னை அதுபோல் செயல்படுவார்.**

✡ **ஊனமுற்றது குறை, மார்க் குறைவு குறை, தாழ்ந்த சாதி குறை, ஏழ்மை குறை, இல்லைஎன்பது குறை. இன்று நிலைமை மாறிய நேரம். நேரம் இக்குறைகளைமீறி ஊனமுற்றவனுக்கு வேலை தருகிறது. குறைந்த மார்க்குக்கு quota உண்டு, தாழ்ந்த ஜாதியை, ஏழ்மையைமீறி வேலை, படிப்பு, கடன் வசதி வருகிறது. அது காலம் மாறியதால் ஏற்படுவது.**

அன்னையை ஏற்றால் அனைத்தும் மாறும்எனப் புரியவேண்டும்.

மாறிய காலம் செய்வதை அன்னை செய்வார்.

குறை தடையில்லை. ஆனால், குறையை வலியுறுத்தக்கூடாது.

**காலம் மாறும், சட்டம் மாறும், ஆட்சி மாறும், பருவம் மாறும், மனநிலை மாறும்என மாறுபவை பல. அன்னையை ஏற்றால் அனைத்தும் மாறும்என அறிவது அவரைப் புரிந்துகொள்வது.**

❀❀❀

# குறையால் ஏற்படும் பெருநிறைவு

குறை நிறையாக மாறுவது திருவுருமாற்றம். எப்படி அது வரும்?

அன்னை குறையைமீறிச் செயல்படுவார். அடுத்த கட்டத்தில் குறையை நிறையாக்குவார். அதற்கும் அடுத்த கட்டம் உண்டு. குறை எவ்வளவு பெரியதானதோ, அன்னை அதை அவ்வளவு பெரிய நிறையாக்குவார்.

இதற்கு உதாரணம் உண்டா? இதன் தத்துவத்தை விளக்கலாமா?

இன்று எழும் பெரிய புள்ளிகள் எல்லாம், மிகத்தாழ்ந்தவர் என்பதை அரசியலிலும், பணத்திலும் காண்கிறோம். காலம் மாறுவதால், பெரும்குறை வாழ்வில் பெருநிறைவாகிறது என்பது நம் தொடர்ந்த அனுபவம். ஜீவியம் (consciousness) அன்னையால் மாறுவதால், காலத்தைவிடப் பெரியதை அன்னை சாதிக்கிறார்.

இப்படி அன்னையைப் புரிந்துகொள்வது, அன்னையைப் புரிவதாகும்.
தத்துவம் ஏதேனும் உண்டா?

வாழ்வுஎன்பது முழுமை. நிறைவு ஒருபகுதி. குறை அடுத்த பகுதி. நிறைவு முழுநிறைவு பெற்றாலும், அதன் ஆட்சி ஒருபகுதியுடன் முடிந்துவிடும். அது பகுதியின் நிறைவு. குறை அடுத்தபகுதி. குறையும் நிறைவும் சேர்ந்தது முழுமை. குறை நிறையாக மாறுவது முழுநிறைவாகும். அம்மாற்றம் திருவுருமாற்றம்எனப்படும்.

பெரிய குறை பெரிய நிறைவாக மாறச் சரணாகதி பெரியதாக இருக்கவேண்டும்.
சரணாகதி திருவுருமாற்றத்தால் பெரிய குறையைப் பெரிய நிறைவாக்குவது அன்னையின் சக்தி.

பெரிய குறை, பெரிய நிறைவு.

❀❀❀